# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்



வெளிவந்துவிட்டது

உலகத் தமிழோசை

உலகில் தினமும் ஒரு டொலர் இல்லாதோர்

காலாண்டு சஞ்சிகை இதழ் 2

தமிழ் வர்த்தக நிலையங்களில் அமோகமாக விற்பனையாகின்றது.



நதி 12 SEPTEMBER 01, 2002 பாலம் 17




## கனேடியப் பிரதமர் ஓய்வு பெறுகிறார்.





வீடு விற்க, வாங்க...

**Raja M. Mahendran, P. Eng.**
(Sales Rep.)

**Office: 416.491.4002 Pager: 416.589.4270**

இன்றைய சேவையே நாளைய வெற்றி!


## அருள் விருந்து

* சுயநலத்துக்கு நிகரான தலைச் சுமை மனிதனுக்கு இல்லை.

* மனதைத் திருத்தி அமைப்பவன் உலகம் திருந்தி அமைவதைக் காண்பான்.

* காட்சி மயமாயிருக்கும் இத்தொல்லுலகில் காண்பதற்கு அரிதாயிருப்பது நல்லொழுக்கம். நல்லொழுக்கத்தை நீ பெற்றிரு.

* கவலையத்திருப்பவர்க்கு நல்ல நித்திரை உண்டு. பற்றற்று இருப்பவர்க்கு நல்ல தியானம் கூடுகிறது. அன்பு உடையார்க்கு இன்பமுண்டு. - செ. சிவசுப்பிரமணியம்


**Singapore Communication**

Only $30.00/M
❖Reliable & Friendly Service
❖50 mins day time Free
❖Evenings & Weekend Free
❖Every Day (12 noon-1p.m) Free
❖c/w, c/c, v/m free
❖Add.Daytime min 0.30ctsonly

**Unlimited Tallking* $50.00 /m**

- u/L Incoming call 500 mins outgoing*
- Up to $150.00 Hardware rebate in store

Store: 416-740-5292

Buy One Cell Accessories & Get Second One ½ Price
**Inventory (Final) Clearance Sale! Start: August 1st, 02**
5010 Steeles Ave. W., Unit 17ABC - Kipling & Steeles



**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**

ஸ்காபரோவில் புதிய இடத்தில் சிவன் ஆலயம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

**3011 Markham Road, Unit 62 & 63**
**(North of Mcnicoll Ave.)**
**Tel: 416-754-7338 / 416-724-7480**



**துரித பணமாற்றுச் சேவை**

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

**416.267.8221**



**Insurance & Financial Services**

**Balan Kanapathi (Agent)**

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel+ Business

LIBERTY MUTUAL London Life

**•416.321.1515 •905.294.2429**

**4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)**



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD, TORONTO, ONT. M1B 5P9, CANADA
TEL: (416) 282-8059, FAX: (416) 282-4978 e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும்

109

விஜய குலத்துங்கம்



பூகம்பம், சூறாவளி அல்லது புயல், வெள்ளம், தீ போன்ற இயற்கை அழிவுகள் உலகின் பல பாகங்களிலும் ஏற்பட்டி வருகின்றது. இவற்றில் ஒன்றான தீயினால் ஏற்படும் அழிவு - நகர்ப்புறங்களில் தீப்பிடிக்கும் போது தீயணைக்கும் படையினர் இதைப் பரவவிடாது அணைத்து விடுவதால் பரவலாக அழிவு ஏற்படுவதில்லை. ஆனால் காட்டில் தீ ஏற்படும் போது அது விரைவாக பரவி பல்லாயிரக்கணக்கான மைல்கள் விஸ்தீரணமுள்ள இடங்களை அழித்து விடுகின்றன.

அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் 5 மில்லியன் ஏக்கர் காடுகள் தீயினால் அழிகின்றது. காட்டுத் தீயானது சராசரியாக மணிக்கு 23 கிலோமீற்றர் என்ற வேகத்தில் பரவக் கூடியது. எந்த ஒரு பொருளும் தீப்பற்றுவதற்கு முன்னர் ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையை அடைய வேண்டும். இது பொருளுக்கு பொருள் வேறுபடும். மண்ணெண்ணெய், பெற்றோல், அல்ககோல் போன்றவை மிகக் குறைந்த வெப்பநிலையில் அறை வெப்பநிலையில் தீப்பற்றக் கூடியது. சில பொருட்களை அதிக நேரம் சூடாக்கிய பின்னரே தீப்பற்றச் செய்ய முடியும்.

உதாரணமாக விறகை எரிக்கும் போது முதலில் காகிதத்தையோ அல்லது மண்ணெண்ணையை தீப்பற்ற வைத்து அதிலிருந்து வரும் வெப்பம் மூலம் விறகின் வெப்பநிலையை அதிகரித்து அதன் பின்னரே விறகு எரியத் தொடங்கும். பொருட்களை எரியும் நிலைக்கு வரக்கூடிய வெப்பநிலையை அதிகரித்து அதன் பின்னரே விறகு எரியத் தொடங்கும். பொருட்கள் எரியும் நிலைக்கு வரக்கூடிய வெப்பநிலையை "எரிபற்று நிலை" என்று கூறுவார்கள். மரங்களின் எரிபற்று நிலை $300^0$c ஆக உள்ளது.

மரங்கள் எரியும் போது அதிலிருந்து வெளிப்படும் ஐதரோ காபன்கள் வளி மண்டலத்திலுள்ள ஒக்சிசனுடன் சேர்ந்து எரிகின்றது. நெருப்பு எரிவதற்கு எரிபொருள் (fuel) தேவை. எரிதலை ஊக்குவிப்பதற்கு அல்லது எரிப்பதற்கு ஒக்சிசன் தேவை. இவற்றை பற்றவைக்க அல்லது பொருளை எரியக் கூடிய வெப்பநிலைக்கு கொண்டுவர, வெப்பத்தைக் கொடுக்கக் கூடிய பொருள் தேவை. காட்டுத் தீ பரவுவதற்கு பல காரணங்கள் உண்டு. மிகவும் வறண்ட நிலை இருக்கும் போது மின்னல் ஏற்பட்டு இடிவிழும் போது அதிலிருந்து பாயும் மின்சாரம் தீப்பற்ற வைக்கின்றது. ஆனால் மின்னலைத் தொடர்ந்து மழை பெய்வதால் இது தீயை அணைத்து விடுகன்றது. எனவே இதன் மூலம் தீப்பற்றுவதற்கான சந்தர்ப்பம் மிகவும் குறைவு. மரமும் மரமும் உராய்வதால் தீப்பற்றும் என சிலர் கூறுவார்கள். ஆனால் உராய்வினால் எரிபற்று நிலையான $300^0$c ஐ அடைவது மிகவும் கடினமாகும்.

அதிமான சந்தர்ப்பங்களில் செயற்கையாகவும் மனிதரின் கவனக் குறைவினாலுமே காட்டுத் தீ ஏற்படுகின்றது. ஒரு பிரதான காரணம் மனிதனின் விஷமத் தனத்தால் வேண்டுமென்று தீ வைப்பதாகும். இரண்டாவது காரணம் campfire எனப்படும். சிலர் camping சென்று campfire என்று விறகுகளை அடுக்கி தீ மூட்டுவார்கள். இவை சரியான முறையில் அணைக்கப்படாமல் விடப்படும் போது இதன் மூலம் காட்டுத் தீ பரவலாம். சிகரெட்டுக்கள்ள புகைத்து விட்டு அதை அணைக்காமல் வெளியே எறியும் போது அதிகமாக தீப்பற்ற சந்தர்ப்பம் உண்டு. சிறுவர்கள் தீக்குச்சிகள், லைற்றர் ஆகியவற்றுடன் விளையாடும் போதும், வானவேடிக்கைகள் மூலமாகவும் தீப்பற்ற சந்தர்ப்பம் உண்டு.

அடர்ந்த காடுகள் தீப்பற்றுவது குறைவாக இருக்கும். அடர்ந்த காடுகளில் சூரிய ஒளி உள்ளே படுவது குறைவாக இருப்பதால், அங்கு ஈரத்தன்மை கூடுதலாக இருக்கும். அத்துடன் அடர்ந்த காடுகளில் மரங்களில், வெளிவிடும் காபனீரொட்சைட்டுதான் அதிகமாக இருக்குமேயன்றி, ஒட்சிசன் குறைவாக இருக்கும் காலநிலையும் காட்டுத்தீ பரவுதலை கட்டுப்படுத்தும். வறண்ட காலநிலையும், கடுமையான காற்றும் காட்டுத் தீ பரவுவதை அதிகரிக்கும். கடுமையான காற்று வீசும் போது fire whirls எனப்படும் நெருப்புச் சூழல்கள் ஏற்படுகின்றன. இந்த நெருப்புச் சுழல்கள் சூறாவளி டொரனடோ போல செயல்படும். பக்கப்பாடாக அல்லது கிடையாக வீசும் காற்று, காட்டுத்தீ ஏற்படும் போது காற்றை மேல் நோக்கித் தள்ளுவதால் காற்றுத் தீயுடன் சேர்ந்து ஒரு நெருப்பு சுழல் காற்றை உருவாக்குகின்றது. இந்த சுழல் காற்றானது எரியும் கட்டைகளைக் கூட, தூக்கிச் சென்று தூர இடங்களில் போட்டு மேலும் பல இடங்களில் தீ பரவும் அபாயம் உண்டு. காற்றின் வேகமானது, காட்டுத் தீயினூடாக செல்லும் போது 10 மடங்காக அதிகரிக்கின்றது.

காட்டுத் தீயை எப்படி அணைப்பார்கள் என்று பார்ப்போம். முள்ளை முள்ளால்தான் எடுக்கலாம் என்பார்கள். அதேபோல் நெருப்பு பரவாமல் தடுப்பதற்கு, தீயணைக்கும் படையினால் நெருப்பு வைப்பார்கள் என்றால் ஆச்சரியமாகத்தான் இருக்கும். இதை 'Back fire' என்று சொல்வார்கள். தீ பரவி வரும் போது, அது வரக்கூடிய பாதையில் முன்கூட்டியே சுற்றிவர ஒரு 6-8 அடி அகலமுள்ள இடத்தில் உள்ள செடி கொடிகள் எல்லாவற்றையும் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட தீ வைப்பின் மூலம் அழித்து விடுவார்கள். இதன் மூலம் அந்த இடம் வரை பரவி வந்த தீ மேலும் பரவ வழி இல்லாது நின்றுவிடும். ஏனெனில் அந்த இடத்தில் எரியக் கூடிய பொருட்கள் இல்லாததால் தீ மேலும் பரவாமல் நின்றுவிடுகின்றது. சில வேளைகளில் இப்படியான இடங்களில் தீ வைத்து இதை அழிக்காமல், கத்தி, மண்வெட்டி போன்றவற்றால் குறிப்பிட்ட அகலப் பாதையில் உள்ள மரம், செடி, கொடிகளை வெட்டி முற்றாக அகற்றி விடுவார்கள். இதன் மூலமும் தீ பரவாமல் தடுப்பார்கள்.

காட்டுத் தீயை அணைக்கும் தீயணைக்கும் படையினர் இரு வகைப்படுவர். ஒரு வகையினர் தரைமூலம், வாகனங்களிலோ அல்லது நடந்தோ தீ பரவும் இடத்தை அடைந்து 20 பேர் கொண்ட குழுக்களாக இயங்கி, முன்கூறியபடி Backfire மூலமாகவோ அல்லது வெட்டி அகற்றல் மூலமாகவோ தீ பரவாமல் தடுப்பார்கள். வாகனம் செல்லும் வசதியிருந்தால், தண்ணீர் தாங்கிகளை உபயோகித்து தண்ணீர் அடித்து தீயணைக்க முயற்சிப்பார்கள். இப்படியானவர்கள் Hotshots எனப்படுவார்கள்.

சில அடர்த்தியான காடுகளில் தரைமூலம் செல்ல முடியாது. இந்த இடங்களுக்கு விமான மூலம் சென்று பரசூட்டுகள் மூலம் கீழே இறங்குவார்கள். இவர்கள் smoke jumpers எனப்படுவர். தண்ணீர் வசதி இல்லாத இடங்களில் விமான மூலம் தண்ணீர் கொண்டு சென்று விசிறுவார்கள். இதற்கென தண்ணீர் தாங்கிகள் கொண்ட விசேட விமானங்களும், ஹெலிகொப்டர்களும் அமைக்கப்பட்டுள்ளன.

தொலைக்காட்சி செய்திகளிலும், நிகழ்ச்சி களிலும் நெருப்புப் பிடித்த இடங்களில் விமானங்கள் ஒரு செந்நிறத் தூள் போன்ற பதார்த்தத்தை தூவுவது போல் பார்த்திருப்பீர்கள். இது பொசுபேற்று பசளையாகும். இந்த இரசாயனப் பசளை நெருப்பின் தாக்கத்தைக் குறைத்து அதை குளிரப் பண்ணுகின்றது. நெருப்பும் பொருளாதாரத்தை மட்டுமல்ல இயற்கை வளத்தையும் பாதிப்பது மட்டுமல்லாது சூற்றாடலையும் மாசுபடுத்துகின்றது.

* * * * * * * * * *

"அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களையும் நீங்கள் எவ்வகையான விடயங்களைக் இக் கட்டுரையில் எதிர் பார்க்கிறீர்கள் என்பதையும் விஜே குலத்துங்கம், 361 Highglen Ave., Markham, Ont., L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லது wijeyalku@hotmail.com என்ற முகவரிக்கு அனுப்பவும்.

நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?
கவலையை விடுங்கள்
கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற


Vitaplex
சம்போ அன்ட் கன்டிஷனர்
உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.
Vitaplex Shampoo $9.99
Vitaplex Conditioner $9.99
Vitaplex Shampoo Plus Conditioner $18.99
Applicable Taxes Extra
கிடைக்கும் இடங்கள்
ரொரன்ரோ, ஸ்காபரோ, மிஸ்ஸிஸாகா எதோபிக்கோ மற்றும் மொன்றியாலில் அநேக தமிழ் வர்த்தக நிலையங்களில் கிடைக்கின்றது.

ஞானம்ஸ் ஸ்ரூடியோ

Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8 x 12
Professional Photographer - கதிர்
416-750-8118
2381 Eglinton Ave., E .Kennedy / Eglinton, Scarbo.

NTE AUTO
New Trade Engineering INC.

ஸ்காபரோவில் 11வது வருட தன்னிகரற்ற சேவை
உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
Also Air Condition Service & Repair

என். ரி. இ. ஓட்டோ இங்க்
CONTACT: SIVABALAN - (416) 750-1573
151 NATUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT
IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCAR.

# APPLEMORE AUTOMOTIVE

Apple Apple Apple

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing





- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**




Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple


### "கதிரொளி" பெருந்திரையில் இரசிகர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கிறது.

#### ஒரு நோக்கு

நான்கு தனித்தனிக் கதைகளைக் கருவாகக் கொண்டது கணபதி ரவீந்திரனின் கதிரொளி தமிழ் திரைப்படம். 74 தடவைகள் மேடையேற்றப்பட்ட "சிதம்பர சக்கரம்" என்னும் நாடகத்தின் மூலமும், கீதவாணி வானொலி மூலமும் கனேடிய தமிழ் மக்கள் மத்தியில் பிரபலமான திரு. கணபதி ரவீந்திரன் அவர்களின் கதை ஆக்கத்திலும் இயக்கத்திலும் செல்வி ரூபி யோகநாதன் அவர்களின் தயாரிப்பிலும், ரவி அச்சுதனின் படத்தொகுப்பு, ஒளிப் பதிவிலும் உருவாக்கப்பட்டுள்ளது கதிரொளி.

க[illegible]ப, தமிழீழப் பிரச்சனைகளை உள்வாங்கி அதன் பின்னணியில் கதைகளை ஆக்கி பிள்ளைகளை எப்படி அணுகவேண்டும். கனடாவில் வாழும் தமிழர்களின் போலித்தன்மைகள் நிலைகளைச் நகைச்சுவை மூலம் கூறிச் சிரிக்க வைப்பதோடு சிந்திக்கவும் வைக்கிறது திரைப்படம்.

பெற்றோர்கள், பிள்ளைகளை எப்படி அணுக வேண்டும். பாரபட்சம் காட்டாமல் அவர்களின் பொருளியல், உளவியற் தேவைகளை தேவையறிந்து நல்குதல் வேண்டும் என்னும் உண்மைத் தத்துவத்தை கனேடியப் பெற்றோருக்குக் காலத்தின் தேவை அறிந்து கதையின் கருப்பொருளாகக் கொண்டது பாராட்டப்பட வேண்டியதும் வரவேற்கப்பட வேண்டியதுமாகும். கருப் பொருளை மேலும் சற்று விரிவாக கனேடிய பின்னணியின் உண்மைச் சம்பவங்களோடு தொடர்பு படுத்தி இருந்தால் கதை மேலும் சிறப்பாக அமைந்திருக்கும் எனலாம். கனடாவில் உள்ள யதார்த்த நிலையினைக் காட்ட தே[illegible]லோகத்திலிருந்து சிவனையும் உமையையும் கொண்டுவந்து அவர்களை மானிட வடிவிலே வேடிக்கை காட்டி இரசிகர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்துள்ளது. சிவலோகம் - கனடா என்னும் கதை. கனடாதான் சொர்க்கபுரி என உணரவைக்கும் முயற்சியிலும் இறங்கியுள்ளார் தயாரிப்பாளர். ஒரு பொழுதுபோக்குப் படமாக இரசிகர்களை மகிழவைக்கவென அவர் இக்கதையை முன்வைத்துள்ளார் எனினும் மக்களின் மனதில் மறுவை ஏற்படுத்தாத வகையில் அமைத்துக் கொள்ள வேண்டிய தேவை நாம் வாழும் நாட்டுச் சூழலையும், மதத்தையும் இணைக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

**தருபவர். த. சிவபாலு**

இப்படப்பிடிப்பில் தொழில்நுட்பம் நல்ல முறையில் கையாளப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கது. இதில் இடம்பெறும் பாடல்களும் ஒரு கலக்குக் கலக்குக்கலக்கித்தான் இருக்கிறது. மிக உயர்ந்த இசையமைப்புப் பாராட்டுக்குரியது. தென்னகத் தமிழ்த் திரைப்படப் பாடல்களுக்கு இசையமைக்கு ஈழத்தவரான கபிலேஸ்வர் பாடியிருப்பதும் வரவேற்கத்தக்கது.
இருபத்தைந்து நடிகர்களுக்கு மேல் பங்குகொள்வ வைத்து தயாரித்திருப்பது மிகச் சிரமான அதுவும் கனடா போன்ற நாட்டில் நினைத்துப் பார்க்கவே முடியாத காரியம். அப்படியிருந்தும் இந்தியாவிலும் சில காட்சிகளைத் தயாரித்துள்ளமை சிறப்பு வகிக்கின்றது. மேற்கொண்ட கன்னி முயற்சிக்கு ஆதரவு நல்க வேண்டியது கனேடிய தமிழர்களின் கடப்பாடு. சமூகத்திற்கு உதவாத திரைப்படங்களைப் பார்ப்பதற்குச் செலவு செய்யும் நம்மவர்கள் இத்தகைய கனேடிய தமிழர்களின் முயற்சிகளுக்கு ஆதரவுக் கரம் நீட்ட வேண்டியது எம் கடமையே.

### சாவகச்சேரி டிறிபெக் கல்லூரி பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல்

சாவகச்சேரி டிறிபெக் கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தின் கோடைகால ஒன்றுகூடல் செப்ரெம்பர் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 8:30 மணி முதல் மாலை 6:00 மணி வரை மோர்னிங்சைட் பூங்கா பகுதிகள் மூன்றிலும் நான்கிலும் நடைபெறும். இதில் சிறுவர் பெரியோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் விருந்துபசாரமும் அதிஸ்டலாபச் சீட்டிழுப்பும், பரிசளிப்பு வைபவமும் நடைபெறும். இந்த ஒன்றுகூடலில் சகல பழைய மாணவர்களையும் ஆசிரியர்களையும் தமது குடும்பத்தினர் சகிதம் வருகை தந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றார்கள். மேலதிக தொடர்புகளுக்கு:

என். சந்திரன் 416-754-2195 / 416-292-9043    சந்திரன் கார்த்திகேசு 416-291-1919


## என் பணி "கடன்" செய்து கொடுப்பதே

## GOOD, BAD OR NO CREDIT*



- வீடு வாங்க அடமானம் • 1st 2nd & 3rd Mortgages
- குறைந்த வட்டி வீதத்தில் புதுப்பித்தல் • Low Rates for Renewals
- வருமானத்தை நிரூபிக்க முடியாத நிலை • Unable to prove income*
- கடன் நிலைப் பிரச்சினை • Credit Rating Problems*
- வீடு திருத்தக் கடன் • Home Renovation Loan
- முதலீட்டுக் கடன் • Investment Loan

* Subject to sufficient equity

**N. MURUGADAS**
MORTGAGE SPECIALIST

**SAVERS MORTGAGE**
TAILORED TO FIT YOUR NEEDS

**416.543.6614**

RES: 905.608.1218 e.mail: mmoroyan@saversmortgage.com

கடன் பட்டோர் நெஞ்சம் போல் கலங்குதல் இனி அவசியமில்லை



**CONDOMINIUM**
> STEELES & WARDEN
> 3BEDROOMS > 2 BATHS
> SPACIOUS KITCHEN
> LOCKER > NEW BEDROOM
> CEREMIC FLOORS
> PARKING > GATEHOUSE
> SECURITY SYSTEM
**********************
> MCCOWAN & FINCH
> B-E-A-U-T-I-F-U-L-L-Y MAINTAINED
> THREE BEDROOMS WITH 2 X 4PC & 2 X 2 PC BATH
> FAMILY ROOM
> DOUBLE GARAGE
> FINISHED BSMT
> SOUGHT AFTER LOCATION
> STEPS TO TTC & SCHOLLS
> ASKING PRICE $269,900
************
MARKHAM: 4 + 2 BEDROOMS
> SEP. ENTRANCE
> EXCLUSIVE LISTING
> FAMILY ROOM WITH FIRED PLACE
> DOUBLE GARAGE
> FINISHED BSMT WITH 2 BED-ROOMS
> KITCHEN & BATH
> LOTS OF IMPROVEMENTS
> HARD WOOD FLOORS
> NEW WINDOWS
> SOME NEW CUPBOARDS
> SHOW GREAT!!
> MCCOWAN & DENNISON
**********************

RE/MAX Above the Crowd!



**Pl.Call: Kamla**
**416-491-4002**

> BIRCHMOUNT & ELLESMER DUNDALK DR.
> TOWN HOUSE IN DEMAND LOCATION
> 3 BEDROOMS > 2 BATHS
> GARGAE > CENTRE AIR
> WON'T LAST > CALL TO VIEW
**********************
> CORNER UNIT - 2 BEDROOM
> NEILSON & MCLEVIN
> UPGRADED BROADLOOM
> 2 BATHS > PARKING
> EAT - IN KITCHEN WITH WINDOW
> ENSUITE AND OUTDOOR LOCKERS
> BALCONY > CERAMIC FLOORS
> RARELY OFFERED FOR SALE IN THIS BUILDING GREAT VIEW

# கனடிய பாடசாலை - கல்வித்திட்டம்
# EDUCATIONAL INFORMATION



சென்ற இதழின் தொடர்ச்சியாக அதீத சிறப்புத் திறன் வாய்ந்த மாணவர்களைப் (*gifted students*) இம்முறை சற்று எழுதிக் கொள்கிறேன்.

தற்சமயம் பெயர் மாற்றத்தின் கீழ், கிழக்கு ரொரன்ரோ "*Toronto East*" என்று கருதப்படும் ஸ்காபுரோவில் உள்ள *Churchill Heights public School* இற்கு குறிப்பிட்ட விடயம் சார்பான வினாக்களுக்கு விடை காண உபஅதிபர் திருமதி. *Linda Brown* அவர்களை அண்மையில் சென்று சந்தித்தேன். அதிக சன நெருக்கடியின்றியும், போக்குவரத்து வாகனங்களின் இரச்சல்களும் இன்றி மிகவும் அமைதியான சூழ்நிலையில் காணப்படும் அப் பாடசாலைக்குள் நுழையும் போது ஓர் இயல்பான சந்தோசம் மனதில் ஏற்பட்டது. இதனுடன் தகுந்த இன்முகத்துடன் என்னை வரவேற்று ஏற்ற பதில்களைத் தந்த உபஅதிபர் திருமதி. *Lind Brown* மேலும் பாடசாலையின் தரத்தையும் தன்மையையும் உயர்த்தியே காண்பித்தார்.

1979இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த *gifted student* கல்விமுறை, பல படிகளில் முன்னேறி தற்சமயம் 210 மாணவர்களோடு மிகச் சிறப்பாக செயலாற்றி வருகிறது. இப்பாடசாலை வெறுமனே அதீத திறன்வாய்ந்த (*gifted*) மாணவர்களிற்கு மாத்திரமன்றி சாதாரண மாணவர்களையும் கூட சேர்த்து மொத்தமாக சுமார் 480 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். சாதாரண மாணவர்கள் kindergarten இல் இருந்து தரம் 6 வரையும் விசேட தரத்தில் பயிலும் மாணவர்கள் (*gifted*) தரம் 2ஐயும், 3ஐயும் சேர்த்த ஒரு முதற்படியாகவும், பின்பு தரம் 4இல் இருந்து தரம் எட்டு (8) வரையுமாக வகுப்புகள் உண்டு. இந்த விசேட (*gifted*) மாணவர்கள் இதர பாடசாலை மாணவர்களைப் போன்று கல்வி அமைச்சின் ஒரே பாடவிதானங்களையே பயிலும் அதேசமயம் இம்மாணவர்கள் இக்குறிப்பிட்ட பாடங்களை சற்றி ஆழமாகவும் விரிவாகவும் இவற்றைப் பயில்கின்றனர். இவ்வாறாக பொதுப்பட இப்பாட-சாலையைப் பற்றி கூறிமுடித்த உபஅதிபர் எனது வினாக்களுக்கு தொடர்ந்து பதில் அளித்தார்.

ஸ்காபரோவில் இதுபோன்று வேறு எந்தப் பாட-சாலை உண்டு என்றும் மாணவர்கள் இப்பாட-சாலைக்கு எந்த அடிப்படையில் தெரிவு செய்கின்றன என்றும், இவ்விடயம் சார்பாக பெற்றோரது கடமைகள் எவையெவை என்றும் பொதுப்பட அவரைக் கேட்டேன்.

ஸ்காபரோ மட்டுமன்றி ரொரன்ரோவின் கிழக்குப் பிராந்தியம் முற்றிலுமாக இந்த ஒரே ஒரு பாட-சாலை மட்டுமே இயங்குகிறது என்று கூறியதோடு, மற்றைய பிராந்தியங்களில் செயற்படும் பாடசாலைகளைவிட இதுவே பெரும் அளவில் அதீத திறன் மாணவர்களுக்கான வகுப்பறையினைக் கொண்டுள்ளது என்றும் பெருமையுடன் கூறிய அவர், மாணவர்கள் எவ்விதம் இப்பாட-சாலைக்கு தெரிவு செய்யப்படுகின்றனர் என்பதனையும் கூறினார்.

பெற்றோரே இவ்விடயத்தில் மிகுந்த கவனம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்றும், தமது குழந்தைகள் அதீத திறன் உடையவர்களாக காணப்படும் சமயம், பெற்றோர்களே இவர்களைப் பற்றி வகுப்பு ஆசிரியர்களிடமும் அப்பாடசாலை அதிபர்களிடமும் தெரியப்படுத்துவதே இதன் முதற்படியாக அமைகிறது. இவ்வாறு குழந்தைகளைப் பற்றியும் அவர்களது அதிவிசேட திறன்களைப் பற்றியும் தெரியப்படுத்தும் அதே வேளை, "*gifted student program*" பற்றியும் அதிலே தமது குழந்தைகளை எவ்வாறு சேர்த்துக் கொள்கிறது என்றும் அது சார்பாக தங்களுக்கு இருக்கும் ஆர்வத்தையும் மிகத்தெளிவான முறையில் ஆசிரியர்களிடம் இது சார்பாக பல தடவைகள் தெரியப்படுத்தி பேசுவது மிகமுக்கியமாகிறது. பொதுவாக பெற்றோர் தமது குழந்தைகளை தரம் குறைந்தவர்கள் என்ற அடிப்படையில் நோக்குவது மிகவும் குறைவு. எனவே தமது குழந்தைகள் தகுதியான திறன் உடையவர்கள் என்பதனை ஆசிரியர்களும், அப்பாடசாலை அதிபரும் ஏற்றுக் கொள்ளும் சமயம். இத் தகுதி அடிப்படையின் முதற்படி ஆரம்பமாகிறது. இவ்வாறு வகுப்பு ஆசிரியர்கள் மூலமும் அதிபர் மூலமும் தகுதியான மாணவர் என்று கருதப்படும் வேளை, சில சிறப்பு ஒழுங்குகள் மூலம் "*psychological*" பரீட்சைக்கு (புலமைப் பரீட்சைக்கு). இம்மாணவர்கள் பாடசாலைகள் மூலம் ஆவன செய்யப்படுகின்றனர். இப் பரீட்சையானது வாய் மூலமும் (*oral*) எழுத்து மூலமும் என்று இரு பிரிவுகளில் நடத்தப்படுகிறது. இவ்விரு பரீட்சையிலும் மாணவர்கள் சராசரி 98% வீதமும் அல்லது ஏதாவது ஒரு பகுதியில் 99% வீதமும் மற்றையதில் சிறிது குறைவாகவும் எடுக்கப்படும் சமயம் இம்மாணவர்கள் தமது இரண்டாம் படியினைக் கடக்கின்றனர். இங்கு குறிப்பிட்ட பரீட்சையானது வகுப்பறைப் பாடங்களைத் தவிர்ந்த வேறு புதிர் வினாக்களாகவும், பொதுவிடய வினாக்களாகவும் அமைகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்மா (சரவணபவ சர்மா)

இவ்வாறு *psychological* பரீட்சையில் தகுதி பெற்ற மாணவர்களது முடிவுகள் *Identification Placement Review Community* குழுவினர்க்கு அனுப்பி வைக்கப்படுகிறது. ஆக இம்மூன்று படிகளிலும் ஆராயப்பட்டு மிகுந்த திறமை வாய்ந்த மாணவர் என்ற பெரு முத்திரையைப் பதித்த பின்பே *Churchill heights public school* இற்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர் என்று தெளிவாக தெரியப்படுத்தினார்.

இவ்வாறு சிறப்பு வாய்ந்த மாணவர்கள் தரம் 1இல் இருந்தே கண்காணிக்கப்பட்டு வரவேண்டும் என்றும் பொதுவாக இவர்களது திறன் எல்லாப் பாடசாலைகளிலும் சிறப்புடையதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். எனவே பெற்றோர்கள் தமது குழந்தைகளை இவ்வாறான விடயத்தில் மிகுந்த சிரமம் எடுத்து உன்னிப்பாக அவர்களை அவதானித்து வருவது எவ்வளவு முக்கியமான ஒரு விடயம் என்பதனை திருமதி. *Linda Brown* அவர்களை சந்தித்த பின்பே உணரக் கூடியதாக இருந்தது. மேலும் தரம் 1இல் இருந்து மாணவர்களை மொழி, கணிதம் இவ்விரண்டிலும் எம்மால் இயன்ற வீட்டு வேலைகளையும் பிரத்தியேக கவனிப்பில் அதிக பயிற்சியையும் நாம் சிறுபிராயத்திலேயே ஊக்குவிக்கும் பட்சத்தில் அதீத திறமையுடைய மாணவர்கள் மற்றைய பாடங்களில் இயல்பாகவே சிறப்புடையவராக திகழ்வார் என்பது ஐயமில்லை.

பொதுவாக மாணவர்கள் தரம் இரண்டில் இருந்து தரம் எட்டு வரை இந்த சிறப்பு வகுப்புகளுக்கு மாணவர்கள் சேர்க்கப் படுகின்றனர், ஆயினும் தரம் நான்கிலேயே அதிக விகிதாரசத்தில் மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர் என்றும் இவர் தெரிவித்தார்.


இம்மாணவர்கள் எந்த வித்த்தில் இப் பாடசாலையில் வித்தியாசப்படுத்தப்படுகின்றனர் என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் இம் மாணவர்கள் விசேடமான வகுப்பறையில் கவனிக்கப்பட்டு வருகின்றனர் என்றும், வகுப்பறையில் ஏராளமான விடயங்கள் ஆய்வு விடயங்களாக (*project work*) வழங்கப்படுகிறது என்றும் தெரிவித்தார். தொடரும்....


## WINDOW COVERING

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.

**BLINDS DRAPERIES AND SHUTTERS**

- ✻ Venetian Blinds
- ✻ Vertical Blinds
- ✻ Roller Shades
- ✻ Pleated Shades
- ✻ Cellular Shades



இருபத்தேழு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:
என். செல்வம்
**416.332.8482**
**416.419.9247**
**905.201.7733**

**FREE ESTIMATE**

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch)
Scarborough, Ont.

## J DAYCARE



- * மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
- * ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
- * காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை
- * மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை
- * சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

**1 Hr. - $3.00**
**Day - $15.00**
**Week - $60.00**

**தினசரி நடவடிக்கைகள்**
* உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு வெளிப்புறச் சுற்றுலா

தொடர்புகளுக்கு:
Mrs.S.J. செளந்தரநாயகம்

151 Lamareaux Dr., TownHouse 99A (Finch / Birchmount) **416-502-3033**

## தமிழர் நிர்வாகத்தில் ஒரு
# EMBASSY



**விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது ஆனால்**

- ❂ வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- ❂ இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- ❂ இலங்கை / இந்திய உணவகம்

சமோசாவிற்கு அழையுங்கள்
416-332-0944
5 SAMOSA -
**$1.00**

Embassy அமைந்துள்ள இடம்: Finch / Middlefield
5200 Finch Ave., Sacarborough
**416-332-8451**

# விண்வெளி

108

கனி



### நட்சத்திரங்கள்

வானிலே, இருண்ட வானிலே
கண்சிமிட்டிக் கதைபல கூறும் உடுக்களே!
உம் கதைதான் என்னவோ!
அறியலாமோ!

விண்வெளியை மிக எளிமையாக அறிந்து கொள்ளும் எமது முயற்சியில் இதுவரையில் "பிரபஞ்சம்", "சூரியக் குடும்பம்", "அந்நியர்கள்" எனும் பகுதிகளைப் பற்றிப் பார்த்தோம். நிட்சயமாக உங்களது அறிவியல் நிலையில் இப்பகுதியில் வந்த விடயங்கள் சிறிது சலசலப்பை ஏனும் ஏற்படுத்தியிருக்கும் என நம்புகின்றேன்.... அவ்வப் போது தங்களது கருத்துக்களைத் தந்து எனது எழுத்துக் களையும், சிந்தனையையும் நெறிப்படுத்திய அனைவருக்கும் நன்றி! வருங்காலங்களிலும் உங்களது ஆக்க பூர்வமான கருத்துக்களை மனவிருப்புடன் எதிர்பார்க்கின்றேன். இனி வரும் சில நாட்களுக்கு நட்சத்திரங்களைப் பற்றிப் பார்ப்போம்.

இருண்ட வானிலே அழகாகக் கண்சிமிட்டி எம்மை எல்லாம் மயக்கும் இந்த உடுக்களைப் பற்றி எல்லாம் நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியம்தான். வளிமண்டலத்திலே ஒளிச் சிதறல்கள் எதுவும் இல்லாத இரவொன்றிலே, வான்பரப்பைப் பார்த்தால் மிக ரம்மியமாக இருக்கும். சிறியதும், பெரியதும், மங்கலானதும் பிரகாசமானதும் எனப் பலவகைப்பட்ட விண்மீன்கள் வான்பரப்பின் [illegible]த் திசைகளில் இருந்தும் ஒளிவீசி எ[illegible]ம எல்லாம் எங்கேயோ ஒரு அற்புத உலகிற்கு அழைத்துச் செல்லும். இதனால் தானோ ஏனோ மனிதன் சொர்க்கம் என்பது வானிலே எங்கேயோ ஒளிந்திருக்கின்றது என எண்ணினான் போலும். இந்த நட்சத்திரங்களை எல்லாம் எண்ண ஆரம்பிப்போமேயானால் மிக விரைவலேயே அந்த எண்ணத்தைக் கைவிட்டு விடுவோம். அவ்வளவு பெருந்தொகையான நட்சத்திரங்கள்.

நமது வெற்றுக் கண்களுக்குத் தெரிகின்ற இவ் வளவு நட்சத்திரங்கள்தானா இருக்கின்றன எனக் கேட்டால்; இல்லை! இன்னமும் அதிகம் என்றுதான் கூறவேண்டும். தொலைக் காட்டிகளின் ஊடாக இன்னமும் அதிகமான உடுக்களைக் காணமுடியும். மேலும் இந்தத் தொலைக்காட்டிகளுக்கும், விஞ்ஞான உயர் தொழில்நுட்பக் கருவிகளுக்கும் அகப்படாமல் கூட ஏராளமான நட்சத்திரங்கள், விரிந்து பரந்த எமது வான்பரப்பில் கும்பல், கும்பல்களாக இருக்கின்றன.

நமது கண்களுக்கு மிகச் சிறியனவாக, ஒரு புள்ளி போல் தோன்றும் நட்சத்திரங்கள் உண்மையில் மிகப் பிரமாண்டமானவை. நமது பூமியைப் போல் பல மில்லியன் மடங்கு பருமானானவை. மிக, மிகத் தொலைவில் இருப்பதனால் அவை எமக்கு சிறியனவாகத் தோன்றுகின்றன. நமது பூமிக்கு மிக அருகில், உள்ள நட்சத்திரம் எமது சூரியன் ஆகும். பூமியில் இருந்து சூரியனின் சராசரித் தூரம் 150 மில்லியன் கிலோமீற்றர் அல்லது 93 மில்லியன் மைல்கள் ஆகும். இந்த நட்சத்திரங்கள் எல்லாம் பொதுவாகச் சக்தியின் ஊற்றுக்கள். உறுதியான வீதத்தில் எல்லாவிதமான (பௌதீக) சக்திகளையும் வீசிக் கொண்டு இருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் ஒளி. (வெளிச்சம்) ஒரு செக்கனுக்கு 300,000 கிலோ மீற்றர்கள் அல்லது 196,000 மைல்கள் என்ற சீரான கதியில், பல ஆண்டுகள் விண்பரப்பில் பயணித்தே நட்சத்திரங்களின் வெளிச்சம் எம்மை வந்தடைகின்றன. சூரியனுக்கு அண்மையில் இருக்கும் நட்சத்திரம் "புறோக்சிமா சென்ரொறி" (Proxima Centauri) ஆகும். இந்த நட்சத்திரத்தில் இருந்து ஒளி - வெளிச்சம் எமது பூமியை வந்தடைய எடுக்கும் காலம் 4.3 வருடங்கள் ஆகும். மிக வலிமையான தொலைக்காட்டியின் ஊடாகத் தெரியும் நட்சத்திரங்களின் வெளிச்சம் அல்லது ஒளி எம்மை வந்தடைவதற்கு எடுக்கும் காலம் பல ஆயிரம் மில்லியன் வருடங்கள் ஆகும். அதன்படி இன்று நாம் காணும் நட்சத்திரங் களின் ஒளியானது பல ஆயிரம் பல மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வீசப்பட்ட ஒளியாகும்.

"Twinkle, twinkel little star" - பொதுவாகவே இன்றைய காலத்தில் எல்லோரும் அறிந்த சிறுவர் பாடல். இந்த Twinkle ஐத் தான் நாம் கண்சிமிட்டும் எனக் கூறுகின்றோம். நட்சத்திரம் ஒன்றில் இருந்து வரும் வெளிச்சத்தின் அளவு கூடிக் குறைந்து, கூடிக் குறைந்து.... என மாறி மாறி நடைபெறுவதாலேயே நட்சத்திரம் கண்சிமிட்டுவது போல் எமக்குத் தெரிகிறது. நட்சத்திரங்கள் உண்மையில் இவ்விதம் கூடிக் குறைவாக மாறி மாறி ஒளியை வெளிவி டுவதில்லை. அவை ஒரு உறுதியான - மாறாத வீதத்திலேயே ஒளியை - சக்தியை வெளிவிடுகின்றன. இந்த ஒளியானது எமது பூமியின் வளிமண்டலத்தினுள் நுழைந்து எமது கண்களை அடைக்கின்றன. இவ்விதம் வருகையில் வளிமண்டலத்தின் காற்றின் அசவினால் கண்களை வந்தடையும் ஒளியின் செறிவு கணத்திற்குக் கணம் மாறுபட நட்சத்திரங்கள் கண்சிமிட்டுவது போல் நாம் உணருகின்றோம்.

நட்சத்திரங்கள் எனும் இப்பகுதி முற்றிலுமே ஓர் அறிவியல் பகுதியாக இருக்கின்றது. மிகவும் சுவாரசியமான இப்பகுதியின் ஊடாக பிரபஞ்சத்தின் புதிரின் பெரும்பகுதியை எம்மால் விளங்கிக் கொள்ள முடியும். அல்லது அறிந்து கொள்ள முடியும். பிரபஞ்சத்தின் பருமன் அதன் ஆரம்பமும் முடியும் கருத்துவாதங்கள் அயன்ரைனின் சார்புத் தத்துவ விளக்கங்கள் எனப் பல விடயங்களை எளிய வடிவில் இப்பகுதியின் ஊடாக பார்க்கப் போகின்றோம். இப்பகுதியை தொடர்ந்து வாசித்து எமது பிரபஞ்சத்தின் பௌதீக விளக்கத்தை அறிந்து கொள்வோம். "யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக!. பற்றியும் நண்பர்கள், தெரிந்தவர்கள், உறவினர்களுடன் இவை பற்றியும் உரையாடுங்கள்.

இது ஆரம்ப அறிமுகம் மட்டுமே. மறுமுறை இன்னமும் பல வியத்தகு விசயங்களுடன் சந்திக்கின்றோம்.

---

பொது அறிவுக் குறிப்புகள்

* குளிர்சாதன இயந்திரம் (ஆரை ஸிஓனடதைஓைன) மனிதர்கள் சொகுசாக இருப்பதற்கு கண்டுபிடிக்கப்பட்டதல்ல. புடவை தொழிலில் பயன்பிடுத்துவதற்காகவே குளிர்சாதன இயந்திரம் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. அடிக்கடிமாறும் வெப்பநிலை காரணமாக துணிகள் சாயம் மாறாமல் இருக்க குளிர்சாதன இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டது.







# அன்புத் தமிழ்



## இயற்கையைப் பேணிய இதயங்கள்

பாரி மன்னன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். பறம்பு மலைக்குத் தலைவன். உடல் வலிமை மிகுந்தவன். மாரியைப் போல வாரி வழங்கிக் கொடைக்குப் பாரி என்னும் முத்திரையைப் பதித்தவன். இயற்கை வனப்பைப் பெரிதும் இரசித்தவன்.

ஒருமுறை ஒலிக்கும் மணிகளையுடைய நெடிய தேரிலே பாரி மன்னன் சென்று கொண்டிருந்த போது வழியிலே அழகிய முல்லைக் கொடி ஒன்று அவனது கண்ணைக் கவர்ந்தது. தேரை விட்டு இறங்கி முல்லைக் கொடியைப் பார்வையிட்டான். பெருங்காற்றினால் அடியுண்டு போலும் அது சரிந்து விழுந்து குலைந்து கிடந்தது. அன்பிற் சிறந்த அவனது இதயம் முல்லைக்கு இரங்கியது.

'மனிதருக்கு இந்த உலகத்தில் மனம்போல வாழ்வதற்கு உரிமை இருப்பது போலவே முல்லைக் கொடிக்கும் வாழ்க்கைச் சுதந்திரம் இருத்தல் வேண்டும். அது படர்வதற்குக் கொழுகொம்பு இல்லாது தவிக்கலாமா? புலவர்கள் தமது நாவன்மை காட்டிய பொழுதெல்லாம் வாரி வழங்கியிருக்கிறேன். முல்லைக் கொடிக்கு அவ்விதம் பாடமுடியுமா, என்ன? அதன் அவலத்தைப் போக்குவதும் மன்னவனின் கடமையே யாகும். வாயில்லாத உயிரினங்களுக்கு உதவுதலே உண்மையான அறம்' என்றெல்லாம் வள்ளல் சிந்தித்திருத்தல் வேண்டும்.

## கவிஞர் வி. கந்தவனம்

தேரைத் தெருவோரம் நிறுத்தி அதன்மேல் முல்லைக் கொடியைப் படரவிட்டு அழகு பார்த்தான் பாரி. இப்பொழுது முல்லைக் கொடி பொலிவுற்றுக் காணப்பட்டது. அது தழைத்து நன்றாகப் படரவேண்டும் என்று வாழ்த்தி, மனநிறைவோடு நடந்து தன் அரண்மனைக்குச் சென்றான் மன்னன்.

நெஞ்சை அள்ளும் இந்த விந்தைமிகு சம்பவத்தைக் கபிலர் பின்வருமாறு பாராட்டுகின்றார்.

..... பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும்பு இருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கெடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி.... (புறம் 200)

ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான் (புறம் 201)

'சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய, பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற் பறம்பிற் கோமான்' என்று சிறுபாணாற்றுப்படை என்னும் நூலிலும் பாரியின் பெருந்தன்மை புகழ்ப்பட்டுள்ளது.

பேகன் என்று இன்னொரு குறுநில மன்னன். கடையெழு வள்ளல்களில் ஒருவன். பாண்டி நாட்டில் பழனி மலையை ஆண்ட தலைவன். கான மயிலின் ஆடலைக் கண்டு களித்துப் பரிசாக அதற்குப் பட்டாடை போர்த்திய பெருமையுடையவன்.

உடாஅ போரா வாகுதல் அறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த எங்கோ (புறம் 141)

என்று பரணர் புகழ்கின்றார். பேகனின் கொடை வளத்தை. மஞ்ஞை உடாது, போராது என்று தெரிந்தும் பட்டாடையை அதற்குப் பரிசாக அளித்த எங்கோமான் என்று வியக்கின்றார் புலவர். மயில்கள் குளிர்ச்சியைக் கண்டு மகிழ்ச்சி கொள்ளும் இயல்பின. பொதுவாக மழைக் காலத்திலே அவை நடமாடிக் களிக்கும். மழைப் பனியில் மயில் நடுங்குமென அஞ்சியே பேகன் ஆடை அளித்தான் என்று மற்றுமோர் இடத்தில் குறிப்பிடுகின்றார் புலவர். 'கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமான், பெருங்கல் நாடன் பேகன்' என்று சிறுபாணாற்றுப் படையிலும் இவன் புகழ்ப்படுகின்றான்.

இந் நிகழ்வுகள் தமிழர் இயற்கை குறித்துக் கொண்டிருந்த கொள்கைக்கான உதார ணங்கள். சம்பந்தப்பட்டவர்கள் மன்னர்கள். எனவே அவர்கள் தத்தம் நாடுகளில் இயற்கையைப் பேணிப் பாதுகாத்திருப்பவர் என்பதில் ஐயமில்லை.

இக் காலத்தில் காடுகளை அழித்தும் விலங்குகளைக் கொன்றும் இயற்கையைச் சின்னாபின்னமாக்குகின்றன பல நாடுகள். கைத்தொழில் வளர்ச்சி என்ற பெயரில் அளவுக்கு மீறிய நச்சுப் புகைகளாலும் இரசாயனங்களாலும் இயற்கைச் சூழலை மாசுபடுத்தி வருகின்றன கைத்தொழில் நாடுகள். இவற்றால் ஏற்படும் பாதிப்புகளை அறிவியலாளர் சுட்டிக் காட்டியதன் விளைவாக, இன்று இயற்கையைப் பேண வேண்டும் என்னும் கொள்கை ஓர் இயக்கமாகவே வளர்ந்து வருகின்றது.

உள்ளூர் மட்டத்திலும் சுற்றாடல் தனிப்பட்ட வர்களால் அழுக்கடைகின்றது. கஞ்சல் குப்பைகளையும் அழுகும் பண்டங் களையும் கண்டபடி வீசிச் சூழலை அசுத்தப்படுத்து கின்றனர் பலர். இதனால் கிருமிகள் பெருகி நோய்களைப் பரவச் செய்கின்றன. சுத்தம் சுகம் தரும், அசுத்தம் நோயையே தரும்.

இன்றைய விஞ்ஞான யுகத்தில் சூழலைப் பாதுகாக்க வேண்டியது குடிமக்களின் தலையாய கடமையாகின்றது. இயற்கைப் பாதுகாப்பு ஓர் மகத்தான அறம். இல்லறத்தில் இருப்பவர்கள் விரும்பிச் செய்ய வேண்டிய அறம். குப்பைகளைக் குறிப்பிட்ட இடத்தில் கொட்டுதல், குறித்த காலத்தில் அவற்றை எரித்தல் அல்லது எருவாக்குதல் போன்றவற்றில் குடும்பத்தவர் கவனம் செலுத்துதல் வேண்டும். மேலும் பொருட்களைப் பொறுப்புடன் கையாளுதல், மீளப் பாவித்தல், புதிப்பிக்க முடியுமானாற் புதுப்பித்தல் முதலிய வழிமுறைகளால் குப்பைகளைக் குறைக்கவும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

அறம்பொருள் இன்ப அடிக்கல் இயற்கை
இறைதரும் சுகமும் இயற்கையின் நீழலே
-இயற்கைத் தமிழ்.


**J.A.B. TRAVELS & TOURS**

*Top Sales Award for Cathy pacific*

ஆசிய - ஐரோப்பா - அவுஸ்ரேலியா - வடமத்திய - தென்அமெரிக்க - உலகின் சகல பாகங்களிற்குமான ரிக்கற் வசதிகளுக்கு நாடவேண்டிய இடம்
J.A.B TRAVELS & TOURS.

1185 DUNDAS ST. E., # 203 *MISSISSAUGA ONT.*
**(905) 896-8320**





வீடு விற்க, வாங்க, மற்றும் குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குபடுத்திக் கொள்ள, இலவச ஆலோசனைகளிற்கும் ஆகக் கூடிய வீடுகளை விற்கும் Re/Max வீட்டுப் பிரதிநிதி "கேதா"வை நாடுங்கள்.





தொடர்புகளிற்கு: 416-677-4707
416-491-4002
24 hrs


### அறிந்து கொள்ளுங்கள்

* சிறுத்தைதான் அதி வேகமாக ஓடும் மிருகம். அதன் சராசரி வேகம் 112 கி.மீ.
* கங்காருதான் மிக அதிக தூரம் தாண்டும் மிருகம். சராசரி 13 மீட்டர் தூரம் தாண்டும்.
* Humming Bird என்ற ரீங்காரப் பறவைதான் உலகின் மிகச் சிறிய பறவையாகும். சராசரி இறக்கையின் நீளம் ஒன்றரை அங்குலம். சராசரி எடை இரண்டு கிராம்.


மகாணப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டிக் கொடுத்துச் சாதனை புரியும்

**V V TUTORING CENTRE**

தரம் 10ற்குரிய

**ENGLISH LITERACY TEST - 2002**

KENNEDY வளாகத்தில்

**செப்ரெம்பர் 07, 2002ல் ஆரம்பிக்கின்றது**

**வகுப்புகள்**







**EPPIE SHUKU B.Sc (Hons.) Uof T**
**and**
**MANGAY CHINNAIAH (B.A (Lond)**

ஆகியோரால் நடாத்தப்படும்.

தொடர்புகட்கு:

**வீ.வீ ரியூரறிங் சென்ரர்**

**(416)701-1763 & (905) 471-3084**

தயவு செய்து எங்கள் தொலைபேசியில் தங்கள் செய்தி விபரத்தைப் பதிவு செய்யவும்

**ELECTRICAL REPAIRS**

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்களைக் குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ள நாடுங்கள்.





**முருகதாஸ்- 416.26.16883**

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1930ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான தமிழ் திரைப்படங்கள்

*1987ஆம் ஆண்டு வெளிவந்த படங்களில்*

### ரெட்டைவால் குருவி

நடிக-நடிகையர்: மோகன், ராதிகா, அர்ச்சனா மற்றும் பலர்.

திரைக்கதை, வசனம், ஒளிப்பதிவு, டைரக்கஷன்: பாலு மகேந்திரா



இசை: இளையராஜா

கதைச் சுருக்கம்:
கோபி, மனைவி துளசியுடன் இன்பமாக வாழ்ந்து வருகிறான், குழந்தை பிறக்க வேண்டும் என்று மோகன் நினைக்கிறான் சாவதான-மாகத் தாயாகலாமே என்று மனைவி எண்ணுகிறாள். துளசி உத்தியோகத்தில் இருப்பவள். அவளுக்கு வேறு ஊருக்கு மாற்றலாகிறது. இந்த நிலையில் கோபிக்கும் ராதாவுக்கும் நட்பு ஏற்படுகிறது. மிக நெருக்கமாகி விடுகிறது, அவள் கர்ப்பமாகிறாள். இவளை மணந்து கொள்கிறான் கோபி. ஆனால், கோபி மணமானவன் என்பது ராதாவுக்குத் தெரியாது. இரு மனைவிக்கும் பிரவச விடுதியில் சேரும் நிலை ஏற்படுகிறது. முடிவு ஒருவாறாகச் சமாளிக்கப்படுகிறது.

விமரிசனச் சுருக்கம்:
உயர்தர நகைச் சுவை இழையோடும் வகையில் திரைக்கதை, வசனம், ஒளிப்பதிவு, டைரக்ஷன் ஆகிய பொறுப்புகளை ஏற்றுத் திறம்படத் தந்துள்ளார் பாலுமகேந்திரா. அவருக்கே உரித்தான முத்திரைகளுடன் விளங்கியது. இசை, இளையராஜா இருதாரப் பிரச்சினையைச் சாமர்த்தியமாக சமாளித்து வெற்றி கண்டுள்ளார் பாலு.

மோகன், இரண்டு பொண்டாட்டிக்காரன் நிலையை அழகாக நடித்துக் காட்டியுள்ளார். நடிகையரும் சிறப்பாக நடித்துள்ளனர். நகைச்சுவையை முக்கியமாகக் கொண்டு, தயாரிக்கப்பட்ட படத்தை இரசிகர்கள் நன்றாகவே இரசித்துப் பாராட்டி, படத்தை வெற்றியடையச் செய்தது குறிப்பிடத்தக்கது.

### அன்புள்ள அப்பா



சிவாஜியும் நதியாவும் தந்தை மகளாக நடித்து வெளிவந்த இப்படம் தந்தை மகள் பாசத்தை உணர்த்தியுள்ள கதையம்சம் கொண்டது. இதில் முதன்முறையாக நடிகர் ரகுமானும் சிவாஜியுடன் சேர்ந்து நடித்துள்ளார்.



### சங்கர் குரு

தயாரிப்பு: ஏவி.எம். (சரவணன் - பாலசுப்ரமணியன்)
நடிக-நடிகையர்: அர்ஜுன், சீதா, சசிகலா, மனோரமா, ராஜலட்சுமி, ஷாலினி, மற்றும் பலர்.



கதை: சிவசந்திரன்

திரைக்கதை, வசனம்: வி.சி. குகநாதன்

இசை: சந்திரபோஸ்

டைரக்ஷன்: ராஜா

கதைச் சுருக்கம்:
கிராமத்தில் பெரிய மனிதப் போர்வையில் அக்கிரமம் செய்து வருகிறான் கயவன் ஒருவன். ஊரே அவனுக்கு நடுங்கியது. அவனை எதிர்க்கத் துணிந்தான் வாலிபன். கோயிலில் முதல் மரியாதையைப் பெறும் உரிமை எனக்குத் தான் உண்டு." என்று வாதாடிய அவனை, நடுரோட்டில் அவமானப் படுத்தினான் இளைஞன். அவமானப்பட்ட அவன், வாலிபனை பழிவாங்கத் துடிக்கிறான். மாறு வேடத்தில் இருக்கும் இன்ஸ்பெக்டர்தான், அந்த வாலிபன்.

வீரமிக்க அந்த இளைஞனை, பெண்கள் இருவர் காதலிக்கிறார்கள். ஒருத்தி, ஏழை; மற்றொருத்தி, படித்தவள். காதல், பாடல், ஆடல், மோதல் பாணியிலே கதை அமைந்துள்ளது.

அர்ஜுனுக்கு ஏற்றவாறு கதாபாத்திரம் அமைந்திருந்தால், அவர் வெகு எளிதில் அனைத்துப் பிரிவு இரசிகர்களையும் மகிழ்வித்தார், செந்தாமரை, சரத்பாபு, சீதா, சசிகலா ஆகியோர் தங்களுக்கேற்ற கதாபாத்திரங்களில் சிறப்பாக நடித்துள்ளார்கள். சந்திரபோஸின் இசை அமைப்பில் வைரமுத்துவின் பாடல்கள் இனிமையாக ஒலித்தன. முதல்படம் என்றாலும் வெற்றிப் படமாக இயக்கிப் பெயர் பெற்றார் ராஜா.


MORTGAGE AVAILABLE
குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்
RBC
குறைந்த வட்டிவீதத்தில் மோட்கேஜ் கடன் பெறுவதற்கு
தொடர்பு கொள்ளுங்கள்: Darish Cell: 416-998-5024
Royal Bank of Canada
Fax: 905-737-9114 e-mail:darish.casseer@rbc.com



வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?
UNITED
PERSONAL INJURY ASSOCIATES
The Car Accident People
ஒன்ராறியோவின் மிகப்பெரிய ஸ்தாபனம்
கனடாவில் 30 வருடத்திற்கும் மேலான அனுபவம்
உங்களுக்குத் தெரியுமா?
நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் $172,000.00 வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடாகப் பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.
விபத்து உங்கள் தவறானாலும் கூட
உங்களால் $ 172,000.00 டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு $400.00 வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.
உடல்ரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள்
யுனைட்டெட்
பண இழப்பீட்டுத் தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய உடன் தொடர்பு கொள்ளவும்
அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்
வீட்டுப்பெண்ணா அல்லது குழந்தை பராமரிப்பவரா? வேலை செய்கிறீர்களா அல்லது வேலையில்லையா? பள்ளி மாணவரா? எவராயிருப்பினும் உங்களால் நஷ்டஈடு பெறமுடியும். நீங்கள் சாரதியாக இருந்தாலும் பாதசாரியாக இருந்தாலும் பேருந்தில் பயணிப்பவரானாலும் சைக்கிளில் செல்பவரானாலும் இன்னும் தவறு உங்களுடையதாக இருப்பினும் கூட உங்களால் நஷ்டஈடு பெறமுடியும்.
உங்கள் அறியாமையால் வாரத்திற்கு
$1000.00
வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்
பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்
தமிழ் உட்பட 25ற்கும் அதிகமான மொழிகளில் சேவை வழங்கப்படுகிறது
இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்
தீபன் - (416) 505-9804
- 5255 Yonge Street, Suite 200, North York
- 257 Dundas Street E., Unit 1, Mississauga
- 29 King Street E., Unit 7, Kitchener
- 507-251 Bank Street, Ottawa
- 195 Main Street E., 1st Floor, Hamilton
- 75 Collier St., Unit A, Barrie




# விளையாட்டுத் தகவல்கள் - 106

## பணம் முக்கியமா? சொந்த நாடு முக்கியமா?? கிரிகெட் விளையாட்டு செய்திகள்



இன்று உலகில் sprots என்ற உண்மையான அர்த்தம் மழுங்கடிக்கப்பட்டு, "பணம் பாதளம் வரை பாயும்" என்ற முதுமொழிக்கேற்ப எந்த விளையாட்டுத்துறையை எடுத்துக் கொண்டாலும், பணமே முக்கியம் என்ற நிலை வந்துவிட்ட ஒரு சாபக்கேடான விடயமாகும். இதிலும் கிரிகெட் விளையாட்டு வீரர்கள் மற்றைய துறை விளையாட்டு வீரர்களைவிட ஒருபடி மேலே போய், பணத்திற்காக தத்தமது நாட்டையே விற்கும் நிலைக்கு வந்து விடுகின்றார்கள்.

உலகில் மில்லியன் கணக்கில் பணம் புரளும் உதைபந்தாட்டத்தில் FIFA இன் கட்டுப் பாட்டினால் பணத்திற்கு முன்பு நாட்டிற்கே முதலில் விளையாட வேண்டும் என்ற கட்டுப்பாட்டு விதி உள்ளது. ஆனால் கிரிகெட் விளையாட்டில் அந்தக் கட்டுப்பாடு இல்லாத படியால், விளையாட்டு வீரர்கள் இதை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கின்றார்கள்.

கிரிகெட் ஆட்டங்களில் world cup இற்கு அடுத்த படியாக ICC Champions Trophy வெற்றிக் கிண்ணம் முதன்மை பெறுகின்றது. இப்போட்டி 1998ஆம் ஆண்டு ICC கிரிகெட் கவுன்சிலால் தொடங்கப்பட்டது. இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் இச் சுற்றுப் போட்டியில் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற 10 நாடுகளுடன் Hollandஉம், கென்யாவும் சேர்ந்து 12 நாடுகள் 15 ஆட்டங்களில் 18 நாட்கள் விளையாட உள்ளன. செப்ரெம்பர் 12ஆம் திகதி ஆரம்பமாகும் இச்சுற்றுப் போட்டிகள் இம்முறை சிறிலங்காவில் நடைபெற உள்ளன. ICC Champions சுற்றுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் நாடுகளின் வீரர்கள் முக்கியமாக சுப்பர் ஸ்டார் என வர்ணிக்கப்படும் அதிகளவு பணம் சம்பாதிக்கும் வீரர்கள் தத்தமது நாடுகளுக்கு விளையாட முடியாது என தெரிவித்துள்ளனர். ஐஸிஸ சுற்றுப் போட்டியிலும், 2003 சவுத்ஆபிரிக்காவில் நடைபெற இருக்கும் World Cup போட்டிகளிலும், உத்தியோக பூர்வ sponsors ஆக "Ambush Marketing" தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த இரண்டு சுற்றுப் போட்டிகளிலும் விளையாடும் வீரர்கள் ICC இன் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு, ICC இன் contract இற்கு கைஎழுத்து இடவேண்டும். இதில் கைஎழுத்து இட்டால் தங்களது தனிப்பட்ட வருமானம் பாதிக்கப்படும் என்ற குறுகிய நோக்கத்தால் நாட்டிக்கு விளையாடுவதற்கு கைஎழுத்து இட சில வீரர்கள் சம்மதிக்க இல்லை. இதில் முக்கியமாக இந்தியாவின் சச்சின் தென்டுல்கரும், கங்குலியும், இங்கிலாந்தின் Hussain உம் முக்கியமானவர்களாகும். இவர்கள் விளம்பரங்கள் மூலம் பல மில்லியன்கள் சம்பாதித்து வருகின்றனர். ICC சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டால் நாங்கள் அணியும் உடையில் தனிப்பட்ட விளம்பரங்கள் (logo) அணியமுடியாது, ஆகவே தமது வருமானம் இழந்துவிடும் என்ற குறுகிய நோக்கத்தில் நாட்டுக்காக விளையாடுவதற்கு மறுத்து வருகின்றனர். அடுத்த வாரம் ICC சபையினால் நன்றாக இறுக்கப்பட்ட சட்டதிட்டங்கள் நடைமுறைக்கு வருகின்றன. பொறுத்து இருந்து பார்ப்போம் இரசிகர்களை மகிழ்விக்க வேண்டிய இந்த நம்பிக்கை நட்சத்திரங்கள் கிரிக்கெட் வானில் மின்னுமா? அல்லது பணத்திற்காக நாட்டை கோட்டை விடுவார்களா என்பதை?

### Morocco Cup - 2002 ஸ்ரீலங்கா பெரும் வெற்றி!




கடந்த சில வாரங்களாக மொரக்கோ நாட்டில் சவுத் ஆபிரிக்கா, பாகிஸ்தான், ஸ்ரீலங்கா ஆகிய மூன்று நாடுகளுக்கு இடையில் Morocco Cup - 2002 சுற்றுப் போட்டிகள் நடைபெற்றன. இதில் சாஜா கிண்ணத்தை இம்முறை கோட்டை விட்ட ஸ்ரீலங்கா அணி மொரக்கோ கிண்ணத்தில் பாகிஸ்தானுக்கு பலத்த அடி கொடுத்துள்ளது. இதற்கும் ஒரு படி மேலே போய் சவுத் ஆபிரிக்காவையும் இறுதி ஆட்டத்தில் தோற் கடித்து மொரோக்கோ கிண்ணத்தை வென்றெடுத்துள்ளது.

மீண்டும் ஸ்ரீலங்கா அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அரவிந்த டீ சில்வாவும் புதிதாக அணியில் சேர்க்கப்பட்ட புலஸ்தி குணரட்னா என்ற இளம் வீரர் இம்முறை சிறப்பாக விளையாடினார்கள். இது சுற்றுப் போட்டியில் Man Of The Match and Man of The Series ஆகிய இரண்டு விருதுகளும் ஸ்ரீலங்கா அணித் தலைவர் ஜெயசூரியாவிற்கு வழங்கப்பட்டன. இச்சுற்றுப் போட்டியில் ஜெயசூரியாவின் அதிரடி ஆட்டத்தினால் நான் ஸ்ரீலங்கா அணி பல வெற்றிகளைக் குவிந்துள்ளது என்றால் மிகையாகாது.

ஒரு நாள் ஆட்டங்களில் தற்போது பலம் பொருந்திய அணியாக விளங்கும் பாகிஸ்தான் அணியிடம் முதல் ஆட்டத்தில் ஸ்ரீலங்கா அணி தோல்வியுற்ற போதிலும் இரண்டாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் அணிய படுதோல்வி அடைய செய்தது. இதில் ஜெயசூரியா 94 பந்துகளில் 97 ஓட்டங்களை விளாசித் தள்ளினார். அடுத்து சவுத் ஆபிரிக்கா அணியை இரண்டு ஆட்டங்களிலும் ஸ்ரீலங்கா அணி வெற்றி கொண்டது. முதல் ஆட்டத்தில் அரவிந்த டீ சில்வா 73 ஓட்டங்களைப் பெற்றார். இதில் ஜெயசூரியா 3 விக்கெட்டுக்களைச் சரித்தார். இரண்டாவது ஆட்டத்தில் அரவிந்த 77 ஓட்டங்களும், சங்ககார 55 ஓட்டங்களும் பெற்றனர். இதில் சந்தானா 3 விக்கெட்டுக்களைச் சரித்து சவுத்ஆபிரிக்க அணியை வெற்றி கொண்டனர். இரண்டு ஆட்டங்களிலும் அரவிந்த டீ சில்வா Mna Of The Match விருது பெற்றுக் கொண்டார். புள்ளி அடிப்படையில் 13 புள்ளிகளைப் பெற்று ஸ்ரீலங்கா முதல் இடத்தையும், 8 புள்ளிகளைப் பெற்று சவுத்ஆபிரிக்கா இரண்டாம் இடத்தையும், 4 புள்ளிகளைப் பெற்று பாகிஸ்தான் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. இதன் மூலம் இறுதியாட்டத்திற்கு ஸ்ரீலங்காவும் சவுத் ஆபிரிக்காவும் தெரிவாகின.

**எஸ். கணேஷ்**

### Morocco Cup - 2002 இறுதியாட்டம்

முதலில் களம் இறங்கிய ஸ்ரீலங்கா அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் நஷ்டத்திற்கு 235 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் ஜெயசூரியா 71 பந்துகளை சந்தித்து 71 ஓட்டங்களையும் (இதில் 10 பவுண்ரிகளும் ஒரு சிக்ஸரும் அடங்கும்), சங்ககார 40, அரவிந்த டீ சில்வா 33, அத்தபத்து 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சவுத்ஆபிரிக்கா சார்பாக Klusener - 2, Konald 2, Kallis 2 விக்கெட்டுக்களையும் பெற்றனர். அடுத்து துடுப்பாடிய சவுத்ஆபிரிக்க அணி முரளிதரனின் பந்து வீச்சிற்கும், புதிய வீரரான புலஸ்தி குணரட்னாவின் பந்து வீச்சிற்கும் தாக்குப் பிடிக்க முடியாமல் திண்டாடியது. இதல் Dippenaar 53, Boucner 70 ஓட்டங்களைப் பெற்று சவுத்ஆபிரிக்க அணி 48.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 208 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. முரளிதன் 2, புலஸ்தி குணரட்னா 2, வாஸ் - 2 விக்கெட்டுக்களையும் சரித்தனர். ஸ்ரீலங்கா அணி 27 ஓட்டங்களால் மொராக்கோ கிண்ணத்தை வென்றது. இங்கிலாந்தில் நடைபெற்ற போட்டிகளில் படுதோல்வி அடைந்த ஸ்ரீலங்கா அணி இந்த வெற்றி மூலம் புத்துயிர் பெற்றுள்ளது. இந்த முழுச் சுற்றுப்போட்டியிலும் ஸ்ரீலங்காவின் முக்கிய வெற்றிக்குக் காரணம் மைதானத்தில் பந்து தடுப்பு முறையே (Fielding) என்பதைக் குறிப்பிடலாம்.


**NOW - EFFECTIVE RELIEF FROM CREDIT CARD DEBTS!**

Are you facing problems paying even the monthly minimum of your credit card dues? Or a bank or car loan? Are money problems causing tensions in family relationships?

There are solutions other than bankruptcy: easy repayment programs that you can manage.

Reduce your debts - pay no further interest. Your income, house, car, business and other assets will remain yours. And no collection calls!

**Get back your peace of mind with qualified credit counselling.**

**Find out more in a no - fee, face-to-face meeting.**
**Counselling in English, Hindi, Bengali.**
**No obligation. complette confidentialit assured.**

**Call: Deepak in Scarborough (Eglington / Kennedy)**
**416-335-3345 or on Cell: 416-436-8828**
**Feel free to Call on Weekends.**

**Walk-in clients welcome - no appointments necessary**
**Tuseday through Sunday**



**Neelam silk**

**உயர்தரப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்**
**முகூர்த்தப் புடவைக்கு இராசியான இடம்**

2002ஆம் ஆண்டின் புதுப்பட்டுத் தெரிவுகள் அனைத்தும் இப்பொழு "நீலம் சில்க்" இல் கிடைக்கின்றன.

- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

**நீலம் சில்க்**



☎: 416-778-7455 Fax: 416-778-8484
1453 GERRAD STREET, EAST (INDIAN BAZZAR)
☎: 416-759-2002
2378 EGLINTON AVE.,E, (Kennedy Rd. & Eglinton Ave, Scar.)

# இன்சூரன்ஸ் (Insurance)

பகுதி 10



"இன்சூரன்ஸ்" என எல்லோராலும் என்றும் பேசப்படுவது தமிழில் "காப்புறுதி" என்னும் சொல்லினுள் அடங்கும். 'காப்புறுதி' என்றால் 'இழப்பீடு' அதாவது 'பாதிப்பு நிவாரணம்' எனப் பொருள்படும். அனேகமாக ஒரு மனிதனுக்கு ஏற்படும் பல்வேறு வகையான இழப்புகளுக்கும் காப்புறுதி செய்து கொள்ளலாம். அவையாவன பின்வருமாறு:

* வாகனக் காப்புறுதி (Auto Insurance)
* ஆயுள் காப்புறுதி (Life Insurance)
* கடுமையான நோய்களுக்கான காப்புறுதி (Critical Illness Insurance)
* உடல் இயலாமைக்கான காப்புறுதி (Disability Insurance)
* முதலீட்டுக் கடன் அடமானக் காப்புறுதி (Mortgage, Loan Insurance)
* வீட்டு காப்புறுதி (Home Insurance)
* பொருட்கள் சொத்துகளுக்கான காப்புறுதி (Property Insurance)
* பற்சிகிச்சை காப்புறுதி (Dental Insurance)
* மருத்துவ செலவு காப்புறுதி (Medical Insurance)
* வியாபார காப்புறுதி (Business Insurance)
* வியாபார பங்குதாரர்களுக்கிடையேயான காப்புறுதி **(Buy & Sell Agreement Insurrance)**
* தொழில் வர்த்தக மேலதிக செலவுகளுக்கான காப்புறுதி (Business Overhead Expenses Insurance)
* Professional Negligence Insurance (தொழில் தவறு நட்டஈட்டு காப்புறுதி)

பகுதி: 10

கடந்த அத்தியாயங்களில் வாகனக் காப்புறுதிகளில் தொடங்கி தொடர்ந்து "லைவ் இன்சூரன்ஸ்" எனக் குறிப்பிடப்படும் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் பற்றிய தலைப்பில் தொடர்ந்த கட்டுரைகளில் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் சேரவேண்டிய ஒருவர் சமர்பிக்க வேண்டிய ஒவ்வொரு விடயத்தினையும் ஆயுள் செய்து முக்கியமாக சமர்பிக்க வேண்டிய தனிப்பட்ட சொந்த விடயங்கள் யாவை என்பது பற்றிப் பார்த்தோம்.

இம்முறை காப்புறுதி செய்யும் போது வழங்கப்பட வேண்டிய மருத்துவ, உடலியல் ரீதியான தகவல்கள் யாவை என்பது பற்றிப் பார்ப்போம்.

1. தங்களின் வழமையான குடும்ப வைத்தியர் பெயர் விலாசம் போன்ற விபரங்கள்
2. இறுதியாக எப்போது மருத்துவ சிகிச்சை தொடர்பாக வைத்தியரை சந்தித்தீர்கள்? என்ன காரணம்? என்ன மாதிரி சிகிச்சை பெற்றுக் கொண்டீர்கள்?
3. தங்களின் உயரம், நிறை யாது?

கடந்த ஒரு வருடத்தினுள் பத்து குற்றங்களுக்கு மேலாக ஏதாவது கூடிக் குறைந்து உள்ளதா? அப்படி ஒரு மாற்றம் இருந்திருந்தால் அது பற்றிய விபரங்கள்?.

4. Have any of your natural parents, brothers or sisters, living or dead, ever had any of the following

தங்களின் சொந்த பெற்றோர், சகோதரங்கள், சகோதரிகள் எவரேனும் பின்வரும் நோய்களுக்கு ஆளாகி அல்லது இந்நோய்களினால் மரணத்தினை எதிர் கொண்டார்களா? அந்நோய்களானவை பின்வருமாறு.

a. Heart disease - இருதய நோய்
b. Stroke - பாரிசவாதம்
c. Cancer - புற்றுநோய்
d. Diabetes - நீரிழிவு நோய்
e. Multiple Sclerosis நரம்பு முடிச்சுகளில் ஏற்படும் சிறு முடிச்சு சம்பந்தமான ஒரு வகை நரம்பியல் நோய்.
f. ALS
g. Ploycystic kidney disease - சிறுநீரக நோய்கள்
h. Huntington's chorea. இது ஒரு வகையான நரம்பியல் நோய். அசாதாரண அசைவுகளைக் செய்யும் நரம்பியல் வருத்தம்.
i. Alzheimer's disease - ஞாபக சக்தியினை இழக்கும் ஒரு வகையான நரம்பியல் நோய்
j. Parkinson's disease - உடல் மற்றும் உடலின் செயல்பாடுகள் சரியான முறையில் இயங்க முடியாத அளவுக்கு உள்ள ஒரு நரம்பியல் கோளாறு.
k. Other hereditary disorede - ஏதாவது ஏனைய சந்ததி நோய்கள்

மேற்குறிப்பிட்ட நோய்கள் காப்புறுதி ஒப்பந்தம் செய்பவருக்கு உள்ளதா? அல்லது இல்லையா? என்பது பற்றி கண்டுபிடிக்க முன்பு அவர்களின் பெற்றோர், சகோதரங்களுக்கு ஏற்கனவே இருந்ததா என்ற ஆய்வு இங்கு

சகல காப்புறுதிக் கம்பனிகளினாலும் பரிசீலனை செய்யப்படுவது வழமையாகும். பொதுவாக இத்தகைய வம்சாவழி நோய்கள் என்பது ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தினை விட, குறிப்பிட்ட சில கடுமையான நோய்களுக்காக செய்யும் காப்புறுதி ஒப்பந்தத்தில் *(critical illness insurance coverage)*

ஒரு பாதிப்பினை ஏற்படுத்தி மாதாந்தக் கட்டுப்


சிவ பஞ்சலிங்கம், B.Com.
(Licensed Insurance Broker by the Ontario Insurance Commission)
416-321-0999


பணம் அதிகரிக்கும் சந்தர்ப்பமோ அல்லது விண்ணப்பத்தினை நிராகரிக்கும் சந்தர்ப்பமோ ஏற்படலாம்.

மேலே குறிப்பிட்ட நோய்கள் காப்புறுதி ஒப்பந்தத்தில் சேர விரும்புவரின் பெற்றோருக்கோ அல்லது சகோதரர்களுக்கோ ஏற்கனவே ஏற்பட்டு இருந்திருந்தால்

a. எவருக்கு ஏற்பட்டது.
b. என்ன மாதிரியான நோய்
c. எத்தனை வயதில் ஏற்பட்டது.
d. அவர் உயிரோடு இருந்தால் தற்போது அவரின் வயது
e. மரணமாகியிருந்தால் மரண

போன்ற விபரங்களை மிகவும் தெளிவாகவும், விபரமாகவும் வழங்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வம்சாவழி நோய்களுக்கு ஆளானவர்கள் பற்றிய தகவல்களுடன், ஒப்பந்தத்தில் சேரப் போகின்றவரின் தற்போதைய உடல் நிலமைகள் யாவற்றினையும் அடிப்படையாக வைத்து ஒப்பந்தத்தில் சேர்ந்து கொள்ளப் போகின்றவர். ஆரோக்கியமான நிலமையில் நீண்டகாலம் வாழும் நிலைமையில் உள்ளவரா? அல்லது குறுகிய கால வாழ்வா? என்பதனை ஒரு ஊகத்தின் அடிப்படையில் முடிவு செய்வார்கள்.

அடுத்த கட்டுரையில் காப்புறுதி ஒப்பந்தம் செய்து கொள்ள போகின்றவரின் சொந்த உடல் நிலை பற்றி ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் வழங்கப் போகும் கம்பனி எவ்வாறு ஆய்வு செய்கின்றது என்பதனைப் பார்ப்போம்.

### ஒருவரிச் செய்திகள்

* உலகிலேயே உள்ள 44 ஏழை நாடுகளில் 33 நாடுகள் ஆபிரிக்காவில் உள்ளது.
* உலகிலேயே மிகவும் குறைவாக வரி விதிக்கும் நாடு ஜப்பான்.
* உலகிலேயே எந்தவொரு நாட்டுடனும் போரிடாத நாடு சுவிற்சலாந்து.
* உலகிலேயே அதிகம் வருமான வரி செலுத்துபவர்கள் நோர்வே நாட்டு மக்கள்.

- மோகனதாஸ் சிவஞானம்


**THE CHILDREN EDUCATION TRUST OF CANADA**

**(CET)**
**சீலன். A**
**416-451-0271**

உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறுதொகையை முதலிடுவதுடன் கனேடிய அரசின் வருடத்திற்கு **$400 இலவசம்**

அரச அங்கீகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்புத் திட்டம். (R.E.S.P)



* The Scotia Bank
* The Royal Trust
* Grant Thornton

**TWO YEARS DIPLOMA**ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.

உலகின் எந்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்

இன்னும் பல சலுகைகள் உண்டு

இலவச ஆலோசனைகள் எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

**நாம் நமது குழந்தைகளை வளர்க்கத் தவறிவிட்டால் அதனால் பாதிக்கப்படுவர்கள் நமது பேரக் குழந்தைகளே!**


## கொக்குவில் இராமகிருஸ்ண மகாவித்தியாலயம் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் சங்கத்தினை ஆரம்பிப்பதற்கு விடுக்கும் அறிவித்தல்

கொக்குவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயம் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் சங்கம் அமைக்க இருப்பதால் பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் கீழ் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


| | |
|---|---|
| சியாமளா ஆறுமுகம் 416-431-9321 | கருணாகரன் 416-269-0078 |
| பக்தகுமார் 416-284-8607 | சண்முகதாஸ் 416-948-0693 |


**கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்**

# விருது பெற்ற

# VIVEKA PRINTERS

**உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும்**



**முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்**

**80 BARBADOS BLVD.,**
**UNIT #4 SCAR., ONT.**
**416-410-6401**

# சாதாரண மனிதனின் சிந்தனையிலிருந்து!



### ஆதங்கம்

அண்மையில் Mid Scarborough Community Centre இல் ஒரு கலந்துரையாடல். காலத்திற்கு காலம் அறிவுப் பசியைத் தீர்த்துக் கொள்ளும் வண்ணம், பலர் அங்கு ஒன்று கூடி, தமிழ் மொழி உட்பட, உலகின் பல பாகங்களிலும் இருந்து வெளிவரும் கலை, இலக்கிய படைப்புக்கள் பற்றி கலந்துரையாடி, விவாதித்து இரசிப்புத் தன்மை முதலாக ஒரு விடயத்தை பல கோணங்களில் அலசி ஆராயும் தன்மைகள் வரை வளர்த்துக் கொள்வதுண்டு. வசதியான வேளைகளில் அதே நோக்கங்களுக்காக நானும் கலந்து கொள்வதுண்டு.

அன்றைய பொழுதில் கலந்துரையாடலுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட விடயம் தென்இந்திய தமிழ் திரைப்படங்களில், ஈழத்து பிரச்சனைகள் பற்றி சரியாக சித்தரிக்கப்பட்டு இருக்கின்றனவா என்பது தான். ஈழமண்ணின் விடுதலை போரட்டத்தை பின்னணியாகக் கொண்டு வெளிவந்த திரைப்படங்களான கன்னத்தில் முத்தமிட்டால், காற்றுக்கென்னவேலி, நந்தா Terrorist. மற்றும் ஈழப்பிரச்சினையை தொட்டுச் சென்ற புன்னகை மன்னன், தெனாலி போன்ற திரைப்படங்களின் கதைகளும், கதை சொல்லப்பட்ட விதங்களும் அங்கு அலசி ஆராயப்பட்டன.

கலந்துரையாடலின் முடிவில் கலந்து கொண்டவர்களின் கருத்தில் பொதுவான ஆதங்கம் ஒன்று பெரும்பான்மையாக ஒத்துக் காணப்பட்டது. அந்த ஆதங்கம் இதுதான். தென்இந்திய திரை உலகம், ஈழத்து பிரச்சனைகளை திரைகளில் சரியாக கையாளுவதில்லை என்பதுடன், புலம்பெயர்ந்து வாழுகின்ற ஈழத்தமிழர்களுக்கு தமது ஆதரவைக் கொடுக்க முன் வருவதில்லை என்பதுவே ஆகும். இவற்றை தென்இந்திய திரை உலகத்தினருக்கும், கண்மூடித்தனமாக காசை அள்ளி எறிந்து திரை நட்சத்திரங்களுக்கு ஆதரவை கொடுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் உணரப்படுத்துவது எவ்வாறு என்றும் ஆராயப்பட்டது. ஒரு சாதாரண மனிதனின் பார்வையில், சிந்தனையில் உண்டான எண்ணங்களை என்னால் இயன்றளவில் இங்கு சொல்லாம் என்று எண்ணுகின்றேன்.

காலத்திற்கு காலம் சிங்கள காடையர்களினால் சூறையாடப்பட்டு வந்த ஈழத் தமிழர்களின் வாழ்க்கை, போராட்டத்தில் இறங்கினால் அழிவு எந்த அளவிற்கு இருக்கும் என்று சற்றும் எண்ணிப் பார்க்காமல் தீர்க்க தரிசனம் அற்ற இந்திய அரசியல்வாதிகளால், சரியான அரசியல் பேசி இலங்கை அரசிடம் ஈழத்தமிழர் பிரச்சனையை தீர்க்க வழி தெரியாமல் கண்மூடித்தனமாக போராட்டத்திற்கு ஆதரவைக் கொடுத்து வளர்த்துவிட்டு, பின் விளைவுகளின் பாரதூரம் கண்டு, பின்வாங்கி தமக்கும் போராட்டத்திற்கும் சம்பந்தமில்லை என்று உலகத்திற்கு காட்ட ஈழத்தமிழர்கள் முதலாக, ஆதரவு கொடுத்த தமிழக தமிழர்கள் வரை பலருக்கு பலவித இன்னல்களைக் கொடுத்த அரசாங்கங்களின் செயல்கண்டு பயந்து தம்மை அந்த இன்னல்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள தென்இந்திய திரைப்பட உலகத்தினர் வெளிப்படையாக ஈழப் பிரச்சனைக்கு ஆதரவு கொடுக்கப் பின் நின்று இருக்கலாம். இந்த மண்ணில் மனிதர்களாக பிறந்த நாம் எல்லோருமே சுயநலம் கொண்டவர்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஈழத்தமிழர்களின் வாழ்க்கைக்கு ஒரு நல்ல வழி பிறக்கும் வரை தனது பிறந்த தினத்தை தனது இரசிகர்களின் விருப்பத்திற்கு இணங்கபெரிய அளவில் கொண்டாடாமல் விட்டதுடன், தனது மூத்த மகனுக்கு பிரபாகரன் என்று பெயர்வைத்து தனது ஆதரவை இயன்ற அளவில் தெரிவித்த நடிகர் விஜயகாந் தமிழ் திரைப்பட உலகத்தைச் சார்ந்தவர்தான் என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் ஒரு சில மணி நேரமாவது மகிழ்ச்சியாக தம்மை வைத்து இருக்கும் திரை நட்சத்திரங்களுடன் மானசீகமான ஒரு உறவை வளர்த்து, அந்த உறவுகளை நேரடியாக பார்க்கத் துடிக்கும் மனித இதயங்களை அரசியல் காரணங்களுக்காக நாம் தடைபோட்டு சினிமா நட்சத்திரங்களுக்கு ஆதரவு கொடுக்க விடாமல் செய்வது இலகுவான காரியம் அல்ல என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

எவரையும் வெறுத்து ஒதுக்குவதன் மூலம் அவர்களுக்கு உண்மைகளை உணர்த்திவிட முடியாது. இந்திய தமிழக, அரசாங்கங்களின் கொள்கைகளினால் ஈழத் தமிழர்களின் படைப்புகள் தமிழகத்தை அடைய முடியாமல் இருப்பது என்பது முற்றிலும் உண்மை. அதே வேளை தமிழக படைப்புக்களுக்கு ஈழத்தமிழர்களின் ஆதரவு முற்று முழுதாக இருப்பது என்பதும் உண்மையே. ஈழத் தமிழர்களின் படைப்புக்களுக்கு நாம் நல்ல ஆதரவு கொடுப்பதன் மூலமே அவர்களுக்கு உண்மையை உணரப்படுத்தலாம். ஈழத் தமிழர்களின் படைப்புக்கள் என்பதற்காக மட்டும் எமது மக்களிடம் இருந்து ஆதரவைப் பெற்றுவிட முடியாது. அது மிகவும் உயர்ந்த தரமாக இருப்பதுடன் தமிழக படைப்புக்களுக்கு இணையாகவும் இருத்தல் மிக அவசியம்.

கலந்துரையாடலில் வெளிப்பட்ட ஆதங்கங்களை அகற்ற சரியான வழிகள், தரமான ஈழத்தமிழர்களின் படைப்புகள், அவற்றிற்கு ஈழத்தமிழர்களினதும் ஈழத்தமிழ் ஊடகங்களின் பாரபட்சமற்ற ஆதரவும் ஆகும். அதேவேளை தமிழக படைப்பாளிகளின் சுயநலம் மட்டும் கொள்கைகளை இனம் கண்டு கொள்ளுதலும் அவர்களுக்கு சரியான வகையில் உணரப்படுத்துவதும் மிக அவசியம். தமிழக படைப்பாளிகளில் சுயநலம் மட்டும் கொள்கையை உடையவர்களிற்கு உணரப் படுத்தும் வழிகள் பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.

சிந்தனை தொடரும்

பரம் G. ஒரு சாதாரணமனிதன்

---

**தெரிந்து கொள்ளுங்கள்**

★ பத்தொன்பதாம் நூற்றாண்டில் இத்தாலியை ஒன்றுபடுத்தியவர் கேபர்.

★ ஒரு மனிதனின் உடலில் உள்ள இரத்தத்தின் அளவு 5.5 லீட்டராகும்.

★ நியுட்ரான் குண்டுகள் உயிருள்ள பொருட்களை மட்டுமே அழிக்கும் சக்தி கொண்டது.

★ பிளையஸ் பாஸ்கல் (Blaice Pascal) என்பவர்தான் கல்குலேட்டரை கண்டுபிடித்துள்ளார்.


## திருமண சேவை



உங்கள் விருப்பத்திற்கேற்ப மணமகன், மணமகளைத் தெரிவு செய்ய சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளுங்கள். எமது சேவையின் பலனைப்பெற்ற தம்பதிகள் பலர். உலகெங்கும் பரந்து தொடர்புகள் குன்றி வாழும் எம்மவர்களின் தேவையே எமது சேவை.

416 261-6219

Email: ratnm51@hotmail.com

WEEKLY AFTER 6:00PM / WEEKENDS ANYTIME

## EDUCATION FUND SERICES Inc.

***The Children's Education Trust of Canada***

குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம்



Siva Kanapathypillai
(Divisional Director)

உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் கல்வியை ஊக்குவிக்கும் கனடா அரசாங்கத்தின் நன்கொடையை(20% Grant) பெற இன்றே நாடுங்கள்.

* டொலர் 10இல் இருந்து இத்திட்டத்தில் சேரலாம்!
* உங்கள் சேமிப்புக்கு உத்தரவாதம்!
* கல்வியை ஒருவராலும் களவாட முடியாது!

சிறந்த சேவையையும், இலவச ஆலோசனைகளையும் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்:

Tel: 416-438-0660 / 416-438-3578  Cell: 416-899-044

Fax: 416-438-8532  Res: 905-472-1139

1200 Markham /Rd., Suite #301, Scarb., Ont.

**முழுநேர, பகுதிநேர வேலை வாய்ப்புக்கள் உண்டு.**

## SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் Truck DRIVING பயிற்சி இடம் (8ஆம் ஆண்டு) வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்

**We Accept Welfare & Unemployment Insurance**




* தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
* One On One Training
* அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

*In Classes*
* 365 (Learning Permit)
* Lock Books
* Air Brake (Z)
* Dangerous Goods
* Border Crossing
* Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

**YOGAN SOCKALINGAM**

**Truck Driving** போதனாசிரியர்

(15 Years Canadian Experience with Trucks)

(905) 793-9546 / (416) 616-5979

**250 Summerlea Road, Brampton, Ont.**



# ஆரோக்கிய வாழ்வு

N. செல்வசோதி



## தியானமும் - வாழ்க்கை வெற்றியும்

தியானம் ஒரு பெரிய விஷயம் என்பதும் மி[illegible]ன்னதமான பலன்களை அளிக்க வ[illegible]து என்பதும் பெரு வாரியான மக்கள் அறிந்தவையே. ஆனால் என்ன பயன் தரும்? என்பதும் எப்படித் தியானம் செய்வது என்பதும் எத்தனை வகையான தியானம் உள்ளன? என்பதும் 80 வீதமான மக்களால் அறியப்படவில்லை.

அதனால்தான் தலைவலியா? தியானம் செய்யுங்கள். வேலை கிடைக்க வில்லையா? தியானம் செய்யுங்கள். என்றவாறு தியானம் பற்றி எடுத்துக் கூறுகின்றனர். தியானத்தைப் பற்றி இப்படி கூறுபவர்கள் அதைப் பற்றி அறியாத வர்களே. தியானம் பற்றி அறிந்தோர் இப்படிக் கூறமாட்டார்கள்.

யார் விரும்பினாலும் கண்களை மூடிக் கொண்டு உட்காரலாம். அவர்களுக்கு எல்லாம் அவர்களுக்கு எல்லாம் தியானம் வந்துவிடும் என்று சொல்வதற்கில்லை. தியானத்தில் பற்பல எண்ணங்கள் அடங்கி உள்ளம் ஒரு எண்ணத்துடன் மட்டும் தொடர்ந்து குறிப்பிட்ட காலம் இருந்தாக வேண்டும்.

எப்படிப்பட்ட நல்ல ஆரோக்கியமான உ[illegible]ல உள்ளத்தை உடையவருக்கும் 3 வி[illegible] மட்டுமே மனம் எப்படி நிற்கும். மகான்கள் எப்படி? என்கிறீர்களா? மாபெரும் பயிற்சியால் அந்த மகோந்ததமான தியான நிலையை அடைகின்றனர்.

பக்தி, உபாசனை, தியானம் எல்லாம் ஒன்று தான். பக்தி, உபாசனை இரண்டும் பரமாத்மா, தேவர்கள் சம்பந்தப்பட்டவை. தியானம் என்பது மனம் சம்பந்தப்பட்டது என்று எண்ணுகின்றனர். குரு கூட வேண்டாம் என்று தாமே தொடங்கு கின்றனர் சிலர் சாதாரண ஞானமும் இல்லாதவர்களால் எழுதப்பட்ட நூல் களைப் படித்து ஏமாறுகின்றனர், கெடு கின்றனர்.

"தியானம் என்பது ஏதோ ஒரு பொருளைத் தொடர்ந்து நினைத்துக் கொண்டிருப்பது. ஆகவே மனத்தைத் தவிர மற்ற ஒரு பொருளும் தியானத்தில் சம்பந்தப் படுகிறது. அதுவே தியானப் பொருள். பொருளாக இருக்கலாம். தியானத்தில் மீண்டும் மீண்டும் செல்வது தொடர்ந்து நினைப்பது நடக்கிறது.

அது நமது நோக்கத்தை அடைவிக்கும் தேவையின் பாத்திரமாகவோ, உட் ச[illegible]டன் கிளம்பும் ஒலியாகவோ, அ[illegible]ய வேண்டிய பொருளாகவோ இருக்கலாம். நாம் எட்ட வேண்டிய இலக்குத் தொடர்பான மாத்திரம் அல்லது பொருளைத் தியானக் குறியாகக் கொண்டு அப்படிப்பட்ட தியானத்தில் நிபுணரான ஒருவரிடத்தில் பயில வேண்டியது தான் தியானம்.

ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை வாழ்க்கையில் அடைய வேண்டும் என அதையே நோக்கமாகக் கொண்டிருப்பவர். அதற்காகத் தியானம் செய்கையில் அது பலவாக வேறுபடுகிறது.


1. பணம், பதவி, சுகபோகம், ஆடை, அணிகலன் என்று பலவற்றை அடையவேண்டியும் நோய், துன்பம் என்பவற்றை நீக்கி ஆயுளை அதிகரிக்கவும்.

2. நிலையற்ற இவ்வுலக வாழ்வை விரும்பாமல் இறைவனுடன் (பரமாத்மா) இரண்டறக் கலந்து நிலையான ஆனந்தத்தை அடையவும் பிறவி எடுக்காது ஜீவன் முக்தராக வாழ்வு வேண்டியும் தியான முறைகளின் குறிக்கோளாகும்.

கண்களை மூடியவாறு உட்கார்ந்து எதனைப் பற்றியாவது மானசீகமாக எண்ணினால் எதை வேண்டுமானாலும் அடைந்துவிடலாம் என்று எண்ணி பிறரையும் நம்ப வைத்து பலர் திண்டாடு கின்றனர்.

தியானத்திற்கு உகந்த குருவைத் தேடி அவரிடம் தீட்சை எடுக்காமல் தியானம் செய்யக் கூடாது. செய்தாலும் வராது. தியானத்தை அடைய சில நல்ல ஒழுக்கங்களைக் கைக் கொள்ள வேண்டும். உள்மனம் கொடூர உணர்வு களிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும் இல்லையேல் தியானத்தில் சிறந்தாலும் அசுர வரம் பெற்று ஆடி அழிந்த கதையாகிவிடும்.

தியானம் செய்பவர்களுக்கெல்லாம் அதிஷ்டம் கைகூடிவராது. கை கூடத் தடையாயிருக்கும் பாவங்களை நீக்க



பிறப்பினால் உண்டான கடமைகளை வெறுக்காது செய்தாக வேண்டும். நாம் மனம் போனபடி செய்வது கடமையாகி விடாது.

தியானம் செய்யுங்கள்

1. முதலில் தியானத்தால் அடைய வேண்டிய நோக்கத்தினை முடிவு செய்யுங்கள்.
2. அதை அடையச் செய்யும் தியானத்தை அதை செய்யக் கற்பிக்க வல்லவரிடம் கற்றுக் கொள்ளவும்.
3. ஒழுக்கத்தால் மனோதிடம் பெறவும்.
4. கடமைகளை நன்கு செய்யவும்.
5. எந்த நோக்கம் அடையவும் இறைவனைப் பணிந்து வணங்கவும்.
6. அசையாத நம்பிக்கையுடன் குரு கற்பித்தவாறு தியானம் செய்யுங்கள்.

* மலை உச்சியை நோக்கி மேலேறுபவன் ஒவ்வொரு அடியாக வைத்துத்தான் மெதுவாக மேலேற முடியும். அதன் பாதாளத்தில் சறுக்கி விழுபவனோ, புயல் வேகத்தில் சறுக்கிச் செல்வான். இதே போன்று உயர்ந்த நிலையை வாழ்க்கையில் எட்டிப் பிடிக்கச் சிறுகச் சிறுகத்தான் நடக்க வேண்டியிருக்கும். ஆனால் நாம் அறிவுப் பாதையில் கீழிறங்கும் போது கண்மூடித் திறப்பதற்குள் அது நிகழந்து விடக்கூடும்.


**Cell Phone Specialist**

YC your connection

1733 Eglinton Avenue E.
Uint 5 Toronto, Ont.
M4A 1J8

**$0 CELL PHONE**

fido

* NO CONTRACT
* NO ACTIVATION FEES

| Per Month | $30.00 | $45.00 | $45.00 |
|---|---|---|---|
| Day Time | 150 | 300 | 200 |
| Evenings & Weekends | 1000 | 1000 | Unlimited |
| Call Forward | Yes | Yes | Yes |
| Call Waiting | Yes | Yes | Yes |
| Conference Call | Yes | Yes | Yes |
| Voice Mail | Yes | Yes | No |
| Minute Tracker | Yes | Yes | No |
| Call Display | No | No | No |

Call: Selvi or Naresh
தமிழில் தொடர்புகளுக்கு அழையுங்கள்: செல்வி
416-285-8800 OR 1-866-309-1010

**FREE PAGING**



CityGear Go.Be
Alpha Numeric Multi Lined Display Window Pagers

* NO AIRTIME CHARGES FOR LIFE*
* FREE VOICE MAIL FOR 1 YEAR

**ROGERS AT & T WIRELESS**

Nokia 3360



$50* on 2 year contract

**$35 PLAN****

call for Deatails
175 minutes daytime / mth
Unlimited evening / Weekends
Free Call Waiting
Free 3 Way Calling
Free Call Forwarding

* After mail in Rebate

** Call Store For More Details

Ericsson T18




$25* on 2 year Contract

**BELL MOBILITY**

NO CREDIT CHECK
SOLO MONTHLY 2MTHS FREE ($35 PLAN)
NO CONTRACT


100 DAYTIME MINUTES PER MONTH & UNLIMTED EVENINGS AND WEEKENDS

$129* Audiovox 9100






$149* Mot 120c



மொன்றியலில் இருந்து அழைத்துப் பதிவு செய்பவர்களுக்கு தொலைபேசி அனுப்பி வைக்கப்படும். எங்களிடம் தொலைபேசிக்குத் தேவையான எல்லா விதமான துணைப் பொருட்களையும் பெற்றுக்கெள்ள முடியும்.

தொலைநகல் இலக்கம்: 416-285-6841

## நகைச்சுவைத் தொடர்.... -72

# "ராசம்மாவின் ராஜ்யம்"

-கலகலப்பு தீசன்




விமானத்தில் எல்ஸ்மயர் இளையாம்பியின்
மனதில் விழுந்த எண்ணங்கள்
12 குயில்கள் ஒன்றாக கூவியது போல....
24 மயில்கள் அகவியது போல
132 தென்னைகள் இளங்காற்றுக்கு இசை எழுப்பியது போல
எண்ணற்ற பக்தர்கள் அரோகரா சொன்னது போல....
இதனை கவிதை வரியில் சொல்ல முடியாது.



அதனால் வரிகள் சாதாரணமாக எழுதினேன்... உங்களை.... கனடாவிலை.... எப்படி கூப்பிடுறவை என....விமனாத்தில் a/c குளிரில் அடைத்த தொண்டையை கனைத்துக் கொண்டு கேட்டா....குமுதா... இலா....இலா....Ella....Ella... என்று புன்முறுவல் முழங்க கூறினார். இளையாம்பி இதுவரை தமிழர்கள் அல்லாத இடங்களில் ..... வேலை செய்ததே....இல்லை...ஏதோ....சமாளித்துவிட்டார்.... என்னை குமுடா என்றுதான் இலண்டனில் அழைப்பார்கள் வெம்பிலி....குமுதா....என்றுதான் என்னை சினேகிதர்கள் கூப்பிடுவார்கள்.

சீர்காழி கோவித்தராசன் பித்துக்குழி முருகதாஸ்
பெங்களூர் ரமணியம்மா,. நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

அதெல்லாம் அந்தக் காலம்
பிறிம்பிலி...மீனா.... வெம்பிலி...குமுதா
பிராங்பேட் பேரம்பலம்
வன்கூவர் வாமதேவன்
சீட்டு....சிவகுமராமன் எனப் பெயர்களைப் பார்த்தீர்களா....



என்ன.... இருந்தாலும் நான் கும்பிட்ட தெய்வம் ஒன்றும் என்னை....கைவிடவில்லை என....குமுதா....மெல்லிய குரலில் கூறியதும் அந்த இரவு விமானப் பயணத்திலும் சூரியன் விமானத்திலும் ஒரு நிமிடம் வந்து போவது போல இருந்தது அப்படியானால் குமுதா....இன்று இளையதம்பியை மறக்கவில்லை நான் கும்பிட்ட தெய்வம் என்னை கைவிடவில்லை....

நல்லகாலம் நல்வாழ்வு வரும்போது பலர் கடவுளை....நினைப்பதில்லை கஸ்டம் வரும்போது எந்த யூனிற்றில் இருக்கும் எந்த தெய்வத்தையும் இரு கைகூப்பி தொழ மறுக்கமாட்டார்கள் இறைவா ஏன் என்னை இப்படி ஆட்டிப் படைக்கிறார் என தேவாரம்பாடி இறைவனைச் சமாளிப்கப் பார்ப்பார்கள். அதிஸ்டம் வரும் போது அது தனது பலன் எனக் கூறும் பலர் கஸ்டம் வரும்போது கடவுளைக் கண்டிப்பது ஏன்

அரபு நாடோ ஆசியாவோ அமெரிக்காவோ ஆபிரிக்காவோ ஏதோ சமயம் நம்பாதவர் இல்லை குமுதா....உடன் கொழும்பு போய் இறங்கினால் நிலைமை.....? சிங்கப்பூரிலேயே....சிக்காமல் திரும்பி வந்து முடிந்துவிட்டால்....? குமுதா.... எத்தனை....நான் சிங்கப்பூரிலே நிக்கிறியள்.... ஒரு கிழமை தான் அப்படியென்றால் உங்கடை சிக்கனமாக.... திருமணத்தை.... முடித்து விட்டால்..... என்ன.... குறிப்பு பாத்தனான்.... ஆவணிக் கடைசிக் கிடையில்.... திருமணம் நடந்தால்.... சரி.... அல்லது.... 10 வருடம்.... செல்லுமாம்.... என்றார்.... இளையாம்பி....




குமுதாவின்....முகம்.... கறுப்பாக இருந்தாலும் கடுமையாகவே கறுத்திருந்தது. இதனை.... இளையாம்பி....கவனிக்கத் தவறவில்லை எனக்கும் அதே போலத்தான் என கரகரத்த குரலில் குமுதா.... கூற முறித்த சீட்டு கிடைத்தால் எப்படி இருக்கும் திடீரென ஒரு சத்தம் விமானம் சிங்கப்பூரில் லாண்ட்பண்ணி விட்டது. நல்ல ஒரு பாதையில் காலடி எடுத்து வைக்கின்றன.... விமானம் ஓடு பாதையில் மெதுவாக ஓடிக் கொண்டிருந்தது. பிரயாணிகள் இறக்கம் ஆரவாரம் ஏதேதோ....நாட்டுப் பாஷைகள் அமளி....துமளி.... ஆனால் குமுதாவும் இளையாம்பியும் கைகோர்த்தபடி அமைதியாக மக்களோடு மக்களாக சிங்கப்பூர் விமான நிலையத்தில் இறங்கினர் உலகண்ணை.... இளையாம்பி.... கோல் எடுத்தவனே....என செக்கண்ட் புளோர் செல்லம்மா.... கேக்க.... இப்ப... கொழும்பிலை அவன்ரை....கலியாணம்.... முடிஞ்சிருக்கும் என ஆட்டிலறி அன்னம்மா....சொல்ல இல்லை....இளையாம்பி சிங்கப்பூரிலை நிக்கிறான் என ராசம்மாக்கா சொல்ல உலகர் திரும்ப செல்லம்மாவைப் பார்த்தார் என்ன.... உலகண்ணை வெய்யில், வெக்கை கடற்கரை ஒன்று கூடல் எல்லாம் முடிஞ்சுது இனி பழையபடி சுவெற்றர்....ஜாக்கெட்....கடவுளே ஊருக்குப் போய் வெயில் இஞ்சை குளிர் என சலித்தா ராசம்மாக்கா பள்ளிக்கூடம் தொடங்குகிறது பழைய படி தாய் தேப்பன் பிள்ளைகளின் படிப்பு வேலை என ஓடத் தொடங்கப் போகிறார்கள் எமது பெற்றோர் எமக்காக ஓடினார்கள் எமக்குப் புரிகிறது. நாம் ஓடித் திருவது எமது பிள்ளைகளுக்குப் புரியுமா? என்ன உலகண்ணை இளையாம்பி ஏன் சிங்கப்பூரிலை இறங்கினவன் எனக் கேட்டா....ஆட்டிலறி அன்னமா






# யோகா சோதிடம்



❊ கிரகப் பொருத்தம் பார்த்தல்
❊ சுபமுகூர்த்தம் கணித்தல்
❊ சாதகக் குறிப்புக் கணித்தல்
❊ பலன் பார்த்தல்

**416-299-8361**

# BPR RENOVATION




* NEW BSMT
* DRY WALL
* PLUMBING
* ELECTRICAL
* PAINTING

இலவச மதிப்பீடு செய்து கொடுக்கப்படும்.

உங்கள் சகலவிதமான திருத்த, நிர்மாண வேலைகளையும் குறித்த நேரத்தில் செய்து கொள்ள அழையுங்கள்:

சந்திரன்: **416-431-6806** Cell: **416-829-7955**

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

# ரவி நடராஜா

**Accident & Traffic Ticket**

(14 Years Insurance Claims Experience)



* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்.
* உரிய இழப்பீடுகள்
* மற்றைய இழப்பீடுகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

(416) 245-6555 2095 Weston Road, Suit 203, Toronto, Ont.
(416) 755-2801 2390 Eglinton Ave., E. Suite 223, Scar.



# பூட்டு? சாவி?

## KEERTH LOGSMITH

**வீடு-வியாபாரம்-தொழிலகம்**

வீட்டுத் திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது சகலவிதமான பூட்டு, சாவி சம்பந்தமான பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய இலக்கம்.

Tel: **(416) 439-3709** Pager: (416) 375-7330

# ACTION HONDA



புதிய பழைய
**HONDA, VOLVO**
மற்றும் **CHRYSLER**
வாகனங்களை
ஈழத்தமிழ் மகன்
சோதீஸ் இடம்
பெறும்போது



எங்கும் கிடைக்காத குறைந்த விலை
**I will beat any price**


ஆயுள் காலத்திற்கு
Oil Change இலவசம்
**Life time Oil change**

சிறந்த நேர்மையான சேவை
**Best Service**

*Call me Now!!* **416-704-1179**

Mon, Fri, Sat: 9am- 6pm
Tues, Wed: 12pm- 9pm
4334 Kingston Rd, Scarborough



உ


சந்ர மௌலீஸ்வரர் துணை


# ஸ்ரீ சந்ர மௌலீஸ்வர சிவாலயம்

## கேட்டதும் வரம் தரும்

## மல்லிகார்ச்சுன மகாலிங்கம்

## அனாவர்த்தன மஹாகும்பாபிஷேகம்







*"துளியுறு துயர்தீரத் தோன்றிய நல்விரனயால்
இனியுறு பயனாலிரண்டுமுற மனம்வையேல்
கனியுறு மரமேறிக் கருமுசுக் கழை புகழும்
பணியுறு கதிர்அதியோன் பருப்பதம் பரவுதுமே"*
*-திருஞானசம்பந்தமூத்தி நாயனார்-*

இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள சிவதலங்களில் 274 திருத்தலங்களே பாடல்ற்ற திருத்தலங்களாகும். இவற்றில் ஐந்தேஜந்து சிவதலங்களே வட இந்தியாவில் உள்ளன. அதிலும் இரண்டு சிவதலங்களே அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவர் தேவாரங்களிலும் இடம்பெற்ற திருப்பதிகளாகும். ஒன்று சிவபெருமான், நிஷ்களவடிவமாய் (அருவம்) உறையும் கைலாயம் எனப்படும் இமயமலை. மற்றது ஸ்ரீசைலம் எனவும், பருப்பதம், சீபற்பதமலை என்றெல்லாம் அழைக்கப்படும். மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூவகைச்சிறப்பும் அமையப்பெற்ற மல்லிகார்ச்சுனம் என்னும் சிவஸ்தலம் உள்ள ஸ்ரீசைலமலையாகும்.

திருநந்திதேவர் வழிபட்டு இறைவனின் வாகனமானதும் சந்ரபகவான் வழிபட்டு தனதுசாபம் நீங்கப்பெற்று சிவபெருமானது சடையில் அமையும் வரம்பெற்றதுடன், அப்பெருமானை சந்ரமௌலீச்வரர் என்ற திருநாமம் பெறக்காரணமாகி நவக்கிரகங்களுள் ஒருவரானதும், தேவர்களும் முனிவர்களும் வணங்கி வரம் பெற்றதுமான இத்திருத்தலத்தில் சிவபெருமான் நிஷ்களசகளநிலை(லிங்கரூப) நிலையில் காட்சி தருகிறார்.

மல்லிகார்ச்சுனமூர்த்தியை தேவாரமுதலிகள் மூவரும், "பணியுறு கதிர்மதியான் படர்சடைமதியம் சேர்த்தான்", "வெண்ணிலா மதிசூடும் வேணியன்" என்றுபுகழ்ந்ததுடன் "தம்மைப்பற்றினார்க்கு கருணைசெய்யும் பருப்பதன்", "கைதொழுவார்க்கென்றும் இன்னருள்செய்யும் எந்தை" என்றெல்லாம் பாடியுள்ளனர். ஆதிசங்கரர் இத்தலத்தை வந்து தரிசித்தபோது அத்திருத்தலம் ஏகாந்தநிஷ்டைக்கு உகந்த இடம் என்று ஏற்று "என் உடம்பு பூராவும் கொடி படர்ந்து கொண்டு காதுகளில் பட்ஷிகள்(பறவைகள்) கூடுகள் கட்டித் தொங்கிக் கொண்டிருக்கும்படி வெளியுலகப் பிரக்ஞையே (உணர்வு) இல்லாமல் ஸ்ரீசைல சிவாகுகையிலே எப்போதும் இருப்பேன்" என்று கூறியதாகவும், "சீகிரி மல்லிகார்ச்சுன மஹாலிங்கம் சிவாலிங்கம்" எனப்போற்றியதாகவும் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதிசுவதி சங்கராச்சார்ய சுவாமிகள் கூறியுள்ளார். இவ்வளவு சிறப்புமிக்க மூர்த்தியின் திருநாமம் பருவதேஸ்வரர், தேவி பெயர் பர்வதனி எனவும் சந்ரமௌலீஸ்வரர், பிரம்மராம்பிகை எனவும் மல்லிகார்ச்சுன மஹாலிங்கேஸ்வரர் மல்லிகார்ச்சுனதேவி எனவும் பலவாறாக துதிக்கப்படுகிறார்.

இத்தனை பெருமைவாய்ந்த அந்தமல்லிகார்ச்சுன நாதராகிய சந்ரமௌலீஸ்வரர் கனடாவிலும்எழுந்தருளி அருள்பாலிக்க நினைத்தாரோ யாரறிவர்?, 19.04.2002ல் அப்பெருமானின் திருவருள் எண்ணப்படி, கோவில் அமைவதற்கு அரசஅங்கீகாரம் பெற்ற இடம் ஒன்றிருப்பதாக தகவல் கிடைத்தது. கோவில் ஒன்றமைக்கும் எண்ணமே இல்லாதிருந்த நாம் இறையுந்தலால் இடம்பார்க்கச் சென்றோம். தொடர்ந்து எல்லாவிடயங்களும் எம்மையறியாமல் இறைவனின் திருவருள்படி அமைந்தன. "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்பதற்கமைய ஆலயத்திற்கான இடம் வாங்கப் பெற்றதுடன் 26.07.02ல் மூலமூர்த்தியுடன் உரியபரிவாரமூர்த்திகளும் ஆலயம் அமையவிருக்கும் இடத்திற்கு எழுந்தருளியுள்ளனர்.

எல்லாம் அப்பெருமானின் திருவிளையாடலேயென்று, நிகளும் சித்ரபானு வருடம் ஆவணிமாதம் 24ந் திகதிக்குச்சரியாகிய செப்ரெம்பர் 9–2002 திங்கட்கிழமை பகல் 9.00 மணி முதல் 10.06 வரையிலான கன்னிலக்கின சுபமுகூர்த்தத்தில் அருள்மிகு சந்ரமௌலீஸ்வரப் பெருமானுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் செய்ய திருவருள்கூடிய செய்தியை சிவபக்தர்களாகிய உங்களுக்கு நாம் தெரியப்படுத்துகின்றோம். விரைவில் கும்பாபிஷேக விவரணம் வெளியிடப்படும்.

ஆலயத் திருப்பணிகளில் பங்களிப்புச் செய்ய விரும்பும் சிவபக்தர்கள்
ஆலயஸ்தாபகர் சிவஸ்ரீ ச. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் ஐயா) அவர்களுடன்
*416-724-7480* அல்லது *416-754-7338*
ஆகிய தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளலாம்.
3011 மார்க்கம் வீதி, இலக்கம் 62,63



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

Answers to Tutorial 107 — August 15, 02

**Ans. 1.** Speed of monkey relative to the Ocean is
$= \sqrt{12^2 + 3^2 + 4^2} = \sqrt{169} = 13$ m/sce.

**Ans. 2.** The product of 2 E3 and 3 E2 is
$(2 \times 10^3)(3 \times 10^2) = 6 \times 10^5 = 6E5$

**Ans. 3.** $(x^2yz^3)(xy^2) = (7^4)(7^5)$
$x^3y^3z^3 = 7^9$ $\therefore xyz = 7^3$

**Ans. 4.** If a, b and c are distinct then the correct factorization is $16 = 1 \times 2 \times 8$. There are six possibilities which give the value for $a^b - b^c + c^a$ is -247, - 61, 65, 249, 263 and 63 of there $8^1 - 1^2 + 2^8$ or 263 is the largest.

**Ans. 5.** Since $^3/_5$ of or 60% of the students voted "yes" and 28% voter no. 88% of the student body voted. Hence 100% - 88 % or 12% of the students did must vote.

## Tutorial - 108

1. An allay A contains 40% of silver and an allay B contains 50% of silver. If Mr. E makes an ornament weighing 150 grams contains 44% of silver, how much of each allay was used.
